ௐ

# சில தமிழ் நாட்டுச் செய்திகள்.



வெளியிட்டவர்:

...னந்தாச்சாரி, B. A., B. L.,

சேலம்.

*

1950

அணு நான்கு.

[எவர்க்குமுரித்து.

ௐ

# முன்னுரை.

1. இச்செய்தியிற் கூறிய யாவும் என்னுடைய சொந்த அபிப்பிராயங்களும் எண்ணங்களும். இவைகளிற் பிறர் எவருக்கும் எவ்விதபங்குமில்லை.

2. இவைகளை வெளியிடுதற்கு வேண்டிய அவசியத்தை மக்கள் வினவுவர். இது பற்றி, நான் நீண்டு யோசித்தேன். கடைசியாக, வெளியிடுவதென முடிவு கொண்டேன்.

3. நாடு சுதந்திரமடைந்த பின்னர், காங்கிரசின் சட்டசபை அங்கத்தினர்கள், தங்கள் பதவியைக்கொண்டு, பணம் சம்பாதித்ததைக் கேட்ட மகாத்மாஜி அவர்கள், காங்கிரசு தாபனத்தையே கலைத்துவிட்டு, அதினிடத்தில் ஊழியர்களடங்கிய ஒரு புதிய சங்கத்தை ஏற்படுத்துவதெனத் தீர்மானித்ததை யாவரும் அறிவர். ஆனால் இதைச்செய்வதற்கு முன் அவர் மறைந்தனர்!

4. அவருடைய அவ்விருப்பத்தை அவருடைய சீடர்கள் நிறைவேற்றகடமைப்பட்டிருந்தனர். நாட்டின்நெருக்கடி, ஏறக்குறைய, தீர்ந்தும், அவர்கள் அதைக் கவனிக்கவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் நாடெங்கும் காங்கிரசு தாபனத்தை வலுப்படுத்தி வருகின்றனர். அவர்கள் வலுப்படுத்து

வது புதிய சபையொன்றல்ல. பழைய பேரும் சீரும் பெற்ற காங்கிரசேயாகும். ஆதலின், அவர்கள் பழைய காங்கிரசின் புகழையும் பெயரையும் பயன்படுத்துகின்றனர் என்பது வெளிப்படை.

5. என்னுடைய தாழ்ந்த எண்ணத்தில், இப்போதிருக்கும் காங்கிரசு ஒரு உளுத்துப்போன மரமாகும். அதினின்றும், அதின் சத்தாகிய தியாகம் அகன்று விட்டது.

6. இந்நிலையில், என்னுடைய உள்ளக்கிடக்கையை மக்களுக்கு அறிவிக்க விரும்பினேன். இதில் ஏதேனும் சத்துளதேல், மக்கள் அதைக் கொள்வாராக!

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

சேலம்
29—5—1950.

**C. அனந்தாச்சாரி.**

# பொருளடக்கம்.

1. சுதந்திரம்.
2. பாகிஸ்தானம்.
3. மெய்யறிவு.
4. பொது மக்களின் விழிப்பு.
5. தனிநாடு.
6. காங்கிரசின் ஆக்ஷி.
7. மதுவிலக்கு.
8. ஜமீன்களும் இனும்களும்.
9. கிராம உத்தாரணம்.
10. ஆக்ஷித்திறம்.
11. பார்ப்பனத் துவேஷம்.
12. காங்கிரசு வீரர்கள்.
13. அஹிம்சை.
14. பொது உடைமை.
15. மக்களின் கடமை.
16. உதிரிகள்.

# சில தமிழ்நாட்டுச் செய்திகள்.

## 1. சுதந்திரம்.

1947 வது ஆண்டு, ஆகஸ்டு திங்கள், பதினைந்தாம் நாள், நம்முடைய சரித்திரத்தில் மிகவும் முக்கியமான நாள். ஆனால், அந்நாள், துக்கத்துக்கு அறிகுறியானதா, அல்லது மகிழ்ச்சிக்கா, என்பதுபற்றி, மக்கள் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ள இடமுண்டு. அன்றுதான்; நமது தாய்நாடு, அகில பாரதநாடு, இரண்டாக்கப்பட்டது. அன்றேதான், நாம், நமது நீண்ட முயற்சியின் பயனாக, சுதந்திரத்தையும் எய்தினோம். அகில இந்தியா–பாகிஸ்தானமாகவும், மிகுந்த இந்தியாவாகவும்–மாறினது, ஒரு சகஜமான, சாதாரண, சரித்திர நிகழ்ச்சியல்ல. நாம் ஒன்றுபட்டால் மட்டும் நமக்கு வாழ்வு உண்டென்பதை, பல நூற்றாண்டுகளின் துக்கானுபவத்தால் நாம் அறிந்திருந்தோம். ஆனால் நாட்டை இரண்டாக்கி, ஒரு துண்டைத் தங்களுக்கு ஈன்றாலொழிய, நம்முடைய சுதந்திர முயற்சியை எதிர்ப்பதென்று, நமது முஸ்லிம் சகோதரர்கள் உறுதி கொண்டிருந்தனர். உள்நாட்டுக் கலகத்துக்கும் தங்களைச் சித்தமாக்கியிருந்தனர். ஆனதுபற்றி அவர்களுடைய விபரீத கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டது. நமது ஊழ்வினையும், உலகின் போக்கும், காலத்தின் கதியும், இப்பிளவை நம் நாட்டின்மேல் சுமத்திற்று.

## 2. பாகிஸ்தானம்.

1. பாகிஸ்தானம், முஸ்லிம் அல்லாதாரிடத்து, நேசத்துடன் தோன்றிய நாடல்ல. "பாக்நா" என்னும் சொல்லுக்கு "சுத்தம் செய்ய" என்பது பொருள். அந்நாட்டைத் தோற்றுவித்தவர்களுடைய எண்ணத்தில் அதுதான் புனித பூமி போலும். இப் பெயரே எஞ்சிய இந்தியநாடு சுத்தமற்றதென்பதையும், கற்சிலையைத்தொழும் காபிர்களாகிய இந்நாட்டினருக்கு அப்புனித நாடு உரித்ததல்லவென்பதையும் காட்டும். அவ்வண்ணமே, அப்புது நாட்டின் உரிமையாளர்களெனத் தங்களைப் பாவித்த முஸ்லிம்கள், அங்கு வாழ்ந்து வந்த முஸ்லிம் அல்லாதாரை அந்நாட்டுக் குடிமக்கள் என்று மதிக்கவில்லை. எஞ்சிய இந்தியாவிலுள்ள முஸ்லிம் குடிகளும் பாகிஸ்தானுக்கு குடியேற தங்களுக்கு உரிமை உண்டென்று நினைத்தனர். இந்திய முஸ்லிம்கள் ஆயிரக்கணக்காக பாகிஸ்தானத்தில் குடியேறினர். இதின் விளைவாக அங்கு வாழ்ந்துவந்த முஸ்லிம் அல்லாதார் அங்கிருந்து விரட்டப்பட்டனர்.

2. முஸ்லிம் அல்லாத மக்களுக்கு, பாகிஸ்தானத்தை ஒரு தனி சுதந்திர நாடாகப் பாவிக்கும் மனப்பான்மையை உண்டுபண்ணிக்கொள்வதும் எளிதாக இருக்கவில்லை. பாகிஸ்தானத்தின் உற்பத்திக்கு, இந்துக்கள்மேல் முஸ்லிம்கள் கொண்டுள்ள தீராத பகைமையைத் தவிர, வேறு எந்த காரணத்தையும் அவர்கள் காணமுடியவில்லை. இப்பகைமைக்கு எவ்விதஞாயத்தையும் அவர்கள் உணரவும்முடியவில்லை. அவர்களுடைய எண்ணத்தில், பாகிஸ்தானம், முஸ்லிம்களின் அடாவழக்கினலும், முரட்டுப் பிடிவாதத்தாலும், பறிக்கப்பட்ட பிரதேசமாகும். பாகிஸ்தானம் தோன்றியபின், முஸ்லிம்

களுக்கு, எஞ்சிய இந்தியாவில் வாழ உரிமை இல்லையென்றும் அவர்களிற்சிலர் நினைந்தனர். எஞ்சிய இந்தியாவின் சில பாகங்களிலிருந்தும் முஸ்லிம்கள் பாகிஸ்தானத்திற்கு விரட்டப்பட்டனர்.

3. இத்தகைய அறியாமையின் பயனாக, பாகிஸ்தானத்தின் தோற்றத்துடன், இரு நாடுகளின் பல பாகங்களில் கலவரங்களும் தோன்றின. "பழிக்குப்பழி" என்னும் ஆவேசம் எங்கும் பாவிற்று. பஞ்சாபு பிரதேசத்தின் இரு பிரிவுகளும் ரத்தக் காடுகளாக்கப்பட்டன. லக்ஷக்கணக்கான மக்கள் உயிர் துறந்தனர். விரட்டப்பட்டு ஓடிவந்த மக்கள் கோடிக்கணக்காக பொருள்களையும் ஆஸ்திகளையும் இழந்தனர். பெண்மணிகள், பல்லாயிரக்சணக்காக, கற்பழிக்கப்பட்டு, மதமாற்றத்துக்குள்ளாக்கப்பட்டனர். நாகரீகம் மறைந்துவிட்டது: முழு மிருகத்தன்மை கூத்தாடிற்று.

## 3. மெய்யறிவு.

1. பாகிஸ்தானமும், பாரதநாடும் அமைதியுடன் வாழ வேண்டுமாயின், அவைகள், ஒன்றை மற்றொன்று, உண்மையாக அறிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்களின் பழைய துரோகங்களையும் அட்டூழியங்களையும் பாரத மக்கள் மறந்து விட வேண்டும். பாகிஸ்தானத்தின் உற்பத்தியைக் குறித்து சர்ச்சை செய்வதை இவர்கள் விட்டுவிட வேண்டும். பாகிஸ்தானத்தைச் சுதந்திரம் வாய்ந்த ஒரு தனிநாடாக இவர்கள் மதிக்க வேண்டும். பாகிஸ்தானத்தின் உள்நாட்டு நிர்வாகத்தையோ அல்லது அதன் ஸ்திர இருக்கையையோ பாதிக்கும் எந்த விஷயத்திலும் இவர்கள் தலையிடக்கூடாது.

2. பாகிஸ்தானத்திலுள்ள முஸ்லிம் அல்லாதாரை, அச்சர்க்கார், அடிப்படையான பிரஜா உரிமைகள் வாய்ந்த

குடிகளாகப் பாவித்து நடத்த வேண்டும். அவர்களுடைய சொத்து, சுதந்திரம், கல்வி, கலை, கடவுள் வழிபாடு, ஆகிய வற்றுக்கு எவ்வித பாதகமும் குறைவும் ஏற்படா வண்ணம் அவர்களை அச்சர்க்கார் பாதுகாக்க வேண்டும். அங்குள்ள முஸ்லிம்களின் மதவெறியை அடக்கி, அவர்களை அமைதி யான குடிகளாகவும் செய்யவேண்டும்.

3. பாகிஸ்தானத்தில் வாழும், முஸ்லிம் அல்லாத குடி மக்களின், பிரஜா உரிமைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில், பாரத நாட்டுச் சர்க்காருக்கும் பெருத்த பொறுப்பு உண்டு. இப்பாதுகாப்பு, முதலாக, பாகிஸ்தான் சர்க்காரின் கடமை யாயினும், இக்கடமையை ஆற்ற அச்சர்க்கார் தவறுவாராயின், பாரத நாட்டுச் சர்க்கார், தங்களுடைய முழு பலத்தைக் கொண்டும், அவ்வுரிமைகளைப் பாதுகாக்க கடமைபட்டிருக் கின்றனர். இது பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இவர்களு டைய முதற் கடமையாகும்.

4. இச்சிக்கலான விஷயத்தில், பாரத நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்கும் பெருத்த பொறுப்பு இருக்கின்றது. இவர் கள் இந்நாட்டுக் குடிகள் என்பதை உணர்ந்து இதற்குப் பணிந்து நடக்க வேண்டும். இவர்களுக்கு ஏற்படும் குற்றம் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளுவதற்கு இவர்களுக்கு ஏராளமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள், பழைய கண எதையும் காணுமலும், மற்ற மக்கள் பால் கொண்டிருந்த பழைய துவேஷ புத்தி இவர் களைவிட்டு அகன்றுவிட்டதென்று காட்டும் வண்ணமும், வாழ கடமைபட்டிருக்கின்றனர்.

5. ஆனல் முஸ்லிம்கள் விஷயத்தில், நாம் அறிந் துள்ள ஒரு முக்கிய விஷயத்தை மறந்துவிடக்கூடாது. இவர்

கள் முஷ்டி பலத்தில் நம்பிக்கையுள்ளவர்கள். இவர்கள் தேக பலத்தையும், ஆயுத பலத்தையும், மதிப்பவர். இச் சக்தி பாரத மக்களிடம் வாய்ந்திருப்பதை, இவர்கள், எங்குளரேனும், உணர்வாராயின், இவர்கள் நேர்மையுடன் நடந்து கொள்ளுவர் என்பதில் ஐயமில்லை. இச்சக்தியைச் சேர்ப்பதும், பெருக்குவதும் பாரத மக்களின் கடமையாகும்.

## 4. பொது மக்களின் விழிப்பு.

1. சுதந்திரத்தை அடைவதிலும், அதைப் பாதுகாப்பது மிகவும் கடினமானது. இப் பாதுகாப்புக்கு, மக்களிடை, இடைவிடாத விழிப்பும் ஜாக்கிரதையும் வேண்டும். அவர்கள் தங்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் உணர வேண்டும். உரிமைகளை விட்டுக் கொடுக்காமலும், கடமைகளையாற்ற தயங்காமலும், நடக்க வேண்டும்.

2. தூங்கிக் கொண்டிருந்த நம்முடைய மக்கள் விழித்துக் கொண்டதாகவாவது, அல்லது, தங்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்ததாகவாவது, காட்ட நாம் யாதொரு அறிகுறியும் காணவில்லை. இந்த சமயத்தில் காங்கிரசின் துரோகம் மகத்தானது. இது மக்களிடம் சென்று, அவர்களைத் தூக்கத்தினின்றும் எழுப்பி, அவர்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் அவர்களுக்கு உணர்த்தி, அவர்கள் தங்களுடைய சுதந்திரத்தைப்பாதுகாக்கவும், தங்களுடைய சுயேச்சையான வாக்கின்படி தங்களுக்குப் பிரியமான ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், உதவவேண்டியிருக்க, அது அவ்வண்ணம் செய்யாமல், அவர்களுடைய வாக்கைத் தன்னுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காகத் தேடுகிறது. நாட்டின் சுதந்திரத்தையடைவதற்காக, காங்கிரசியக்கம் தோன்றிற்று. அச்சுதந்

திரம் கிட்டியவுடன் இவ்வியக்கம் மறைந்துவிட கடமைபட்டது. ஆனல் அது இப்பொழுது பதவியிலும் பணத்திலும் ஆசை கொண்டு சுயநலமிகளின் ஸ்தாபனமாக மாறிவிட்டது. தன்னலம் பாராத, பொது நலம் பேணும் பெரியோர் சிலர் அதில் இன்னும் இருப்பினும், அவர்கள் அச்சபையின் சுய நலப் போக்கை மாற்ற வல்லுனரல்லர்.

3. இப்பொழுது மக்கள் அடைந்துள்ளது அரசியல் சுதந்திரமேயென்றும், இனி அவர்கள் அடைய வேண்டிய முக்கியமான பொருளாதார சுதந்திரமும் சமூக சுதந்திரமும் எஞ்சியிருப்பதாகவும் சொல்லிக்கொண்டு, அது மக்களின்மேல் தன்னுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்த முயன்று வருகிறது. நம்மைச் சமீபத்தில் விட்டு விலகின வெள்ளையர்கள் தங்கள் முதுகில் கருப்பு மனிதர்களை ஆளும் பளுவைச் சுமந்து வந்ததாகச் சொல்லி வந்தனர். அஃதேபோல், இப்பால், காங்கிரஸ்காரரும் நமது நாட்டில் ராமராஜ்யத்தை ஏற்படுத்தும் பளுவைத் தாங்கள் தங்களுடைய முதுகில் சுமப்பதாகச் சொல்லுகின்றனர். இதை நோக்கின், நம் மக்களுக்கு ஏட்டளவில் மட்டும் சுதந்திரம் ஏற்பட்டுளதேயொழிய, அவர்களை உண்மைச் சுதந்திரத்தை நுகர நமது காங்கிரஸ்காரர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

4. சென்ற சில ஆண்டுகளுக்குள், இப்பரோபகாரிகள் தங்களுடைய ஸ்தாபனத்தின் பெயர், பதவி முதலியவற்றை அறனற்ற முறையில் உபயோகித்து ஈட்டிய பொருள் கொஞ்சமல்ல. நமது சட்டசபைகளில் இடம் வகிக்கும் காங்கிரஸ்காரர்களை, ஒரு பெரியார், கொள்ளைக்காரர்களுக்கு ஒப்பிட்டார். இன்னொருவர் அவர்களை காய்ந்தமாடு கம்பங்காட்டில் புகுந்ததற்கு ஒப்பிட்டார். இவை எதிலும் சிறிதும் மிகை

யில்லை என்பது மகாத்மாஜி இப்பொழுதிருக்கும் காங்கிரசு நிலையத்தைக் கலைத்துவிட தீர்மானித்ததே காட்டும். இனி காங்கிரஸ்காரர் தருணம் வாய்ந்த பொழுது, பழைய பெருமையைப் பேசிக் கொண்டு சுயநலத்தைப் பேணுவர் என்பதும் பொது நலத்தைப் புறக்கணிப்பர் என்பதும் திண்ணம். திரு பாபு புருஷோத்தம்தாஸ் டாண்டன் அவர்களை அச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்காமல் இப்பொழுதிருக்கும் திரு பட்டாபி சீதாராமய்யா அவர்களைத் தேர்ந்தெடுத்ததுவும் இதைக் காட்டுவதாகும். திரு பாபு டாண்டன் அவர்கள் காங்கிரஸ்காரர்களின் அறனற்ற செயல்களைக் கேட்டு மனம் புண்ணுண்டவர்களில் ஒருவர். திரு சீதாராமய்யா அவர்கள் காரியவாதி, தந்திரசாலி. காங்கிரசு தலைவராகத் தன்னைத் தேர்ந்தெடுத்ததற்கு, தன்னுடைய நன்றியைச் செலுத்துவதற்காக, மாகாண காங்கிரசு கமிட்டி தலைவர்களையெல்லாம் அகில இந்திய காங்கிரசு காரிய கமிட்டியின் அங்கத்தினராகச் செய்துவிட்டார்.

## 5. தனி நாடு.

1. ஒரு நாடு என்றால் அதற்கு ஐந்து அங்கங்கள் வேண்டும். அவையாவன:—

(1) குறித்த எல்லைகளையுடைய அந்நாட்டில் வசிக்கும் பிரஜைகள்.

(2) அப்பிரஜைகளை ஆளும் சர்க்கார்.

(3) அப்பிரஜைகளையும் அச்சர்க்காரையும் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்கள்.

(4) அச்சட்ட திட்டங்களை அமுல்செய்யும் சிப்பந்திகளும், நாட்டை உள் கலவரத்தினின்று காக்கும் போலீசு

படையும், வெளி ஆக்ரமிப்பினின்று தடுக்கும் ராணுவப் படையும்.

(5) மேற்கூறிய சிப்பந்திகள், படைகள் ஆகியவர்களை நிர்வகிப்பதற்காக பிரஜைகள் சர்க்காருக்கு செலுத்தும் வரிகளும். இந்த ஐந்து அங்கங்களும் இல்லாதது ஒரு நாடாகாது.

3. இந்த ஐந்து அங்கங்களின் உண்மையை அறிந்தவன்தான் ஆக்ஷியாளன். பிரஜைகள் தங்களுடைய சர்க்கார் ஏற்படுத்தும் சட்ட திட்டங்களுக்கு, சுயேச்சையாக, கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். சட்டங்களுக்கு கீழ்படியும் தன்மை அவர்களுடைய இயற்கையின் குணமாகிவிடவேண்டும். அச்சர்க்காரும் அப்பிரஜைகளுக்கு ஹிதமானதும் அவர்கள் வரவேற்ககூடியதுமான சட்ட திட்டங்களையே செய்யவேண்டும். அச்சட்ட திட்டங்களும் கொஞ்சமானவைகளாகவும் பிரஜைகள் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியவைகளாகவும் இருக்கவேண்டும். நாட்டின் நெருக்கடியான நிலையிலன்றி, அச்சட்ட திட்டங்கள் பிரஜைகள் வெறுக்ககூடியவையாக இருக்கக்கூடாது. பிரஜைகளுக்குச் சர்க்கார் விதிக்கும் வரிகளும் அவர்கள் தாங்கக்கூடியவையாகவும் சுலபமாகச்செலுத்தகூடியவையாகவும் இருக்க வேண்டும். வரியை ஒரு பளுவாக பிரஜைகள் உணரக்கூடாது. இவைகளை அவர்கள், விதிகளின்படி, முகமலர்ச்சியுடன், செலுத்தவேண்டும். இவ்வரிகளைப்பெறும் சர்க்காரும், அப்பணங்களைச்சிக்கனமாகவும் பயன்படும்வகையிலும் உபயோகிக்கவேண்டும். நாட்டின் சிப்பந்திகள் நாணயமும் திறமையும்வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய கடமைகளைச்செய்வதில், சிபார்சுக்கோ, அல்லது பண ஆசைக்கோ இடம் கொடுக்கக்கூடாது. அவர்களுக்கு கொடு

க்கப்படும் சம்பளங்களும் போதியவையாக இருக்கவேண்டும். ஒரு குடும்பத்தின் காரியங்கள் சீர்மையுடன் நடைபெறுவிட்டால், அக்குடும்பம் கெட்டுப்போய்விடுகிறது. ஒரு நாட்டின் காரியங்கள், அதிலடங்கிய, பல்லாயிரம் குடும்பங்களின் நன்மையைக்கருதி, நேர்மையுடன் நடைபெற வேண்டும். அவைகளில் தனி ஒருவனுடைய அல்லது ஒரு கூட்டத்தினுடைய, பிடிவாதத்துக்கோ அல்லது பைத்தியக்கார கொள்கைக்கோ, இடம் இருக்கக்கூடாது.

3. எந்த நாட்டில் இந்த ஐந்து அங்கங்களும் உத்தமமாக அமைந்திருக்கின்றனவோ, அதுதான் உத்தம நாடாகும். அங்கே சட்டங்கள் சிலவாகவும் சுலபமாகவும் இருக்கும். அச்சட்டங்களுக்கு மக்கள் கீழ்ப்படிந்து நடப்பர். அங்கே வரிபளுவு எளிதாக இருக்கும். அவ்வரிகளை மக்கள் ஒளிக்காமலும் சலிக்காமலும் செலுத்துவர். அங்கு சர்க்கார் ஊழியர்கள், ஆசைக்கு வசப்படாமல், தங்கள் பணிகளை ஊக்கத்துடன் ஆற்றுவர். அந்நாட்டின் சர்க்காரும் பொதுப்பணங்களை, வாரி இறைக்காமல், தங்களுடைய சொந்த சொத்தைப்போல் பாது காத்து, மக்கள் பயனுறுமாறு செலவிடுவர். நாடும், கல்வி, சுகாதாரம், ஆரோக்கியம், விவசாயம் கைத்தொழில், வாணிகம் ஆகிய துறைகளிலும் மேம்படும். இனி, நமதுநாட்டின் ஆக்ஷியைக் கவனிப்போம்.

## 6. காங்கிரசின் ஆக்ஷி.

1. சென்ற சில ஆண்டுகளாக, காங்கிரசு கக்ஷியினர் நமது நாட்டை ஆண்டு வருகின்றனர் நாட்டின் அதிர்ஷ்டவசத்தால், அதின் மத்திய அரசாங்கத்தை நடத்துவோர் தேர்ச்சியும் திறமையும் வாய்ந்தவர். அங்கு தலைமை வகிக்கும் பெரியோர்களின் வாய்மையும் பெருந்தகையும் உலகு

அறிந்தது. ஆனால் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது மாகாண ஆக்ஷியாகும். இதற்கிலக்காக நாம் நம்முடைய மாகாணத்தை எடுத்துக்கொள்வோம். இங்கு ஆக்ஷிபுரிய முன்வந்தோரில் பெரும்பாலோர், அரசியலாவது ஆக்ஷிமுறையாவது அறிந்தோரல்லர். இவர்களுடைய முதிர்ந்த வயதில், இவர்களுக்கு, இவைகளை கற்கும் திறனும் வெகுசிறிதேயாகும். இவர்கள் காங்கிரசின் விசேஷ கொள்கைகளைக் காதினால் கேட்டிருந்தவர். காங்கிரசின் உச்சிநிர்வாக அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டும், அவர்களுடைய திட்டங்களுக்குட்பட்டும், தங்களுடைய ஆக்ஷியை நடத்தவேண்டுமென்று, தங்களுடைய பொருப்பையும் உணர்ந்தவர். முதலாவதாக, இவர்கள் கோரியது, பதவியின் பெருமையும் வருமானமும். இரண்டாவதாக, இவர்கள் அடைந்தது தங்களுடைய சொந்த விஷயங்களில், சர்க்கார் அதிகாரத்தைக் கொண்டு பெறக்கூடிய சில அனுகூலங்கள். அதாவது தங்களுடைய சொந்த பண்ணையத்தைச் செம்மைப்படுத்திக்கொள்ளுவது, அல்லது தங்களுடைய உற்றார் உறவினருக்கு உத்தியோகமோ அல்லது தொழில் வசதியோ சம்பாதிப்பது, முதலியவை. மூன்றாவதாக, இவர்கள் கடமைப்பட்டிருந்தது, யாதெனின், தாங்கள் இப்பதவிகளை அடைவதற்கு உதவிய சட்டசபைகளின் காங்கிரசு அங்கத்தினர்களுக்கு, அரசாங்கத்தின் எல்லா துறைகளிலும் குறைவற்ற சலுகையும் செல்வாக்கும் இருக்கும்படிசெய்தல். இவர்களுடைய இவ்வாசைகளையும் கோரிக்கைகளையும் நாட்டின் நிரந்தர உத்தியோகஸ்தர்கள் கடிதில்உணர்ந்தனர்: எளிதில் பூர்த்தி செய்தனர். நாட்டின் உண்மையான நிர்வாகம் இவ்வுத்தியோகஸ்தர்களிடையே தங்கிற்று. யுத்தகாலத்தில் ஏற்பட்டிருந்த ஒழுங்கீனங்கள்நீடித்தன, பெருக்கும் அடைந்தன. சலுகையும் லஞ்சப்பழக்கமும் குடிகொண்டது. ஆக்ஷி

யின் திறன் குன்றி, அரசாங்கம் கழுதையாகிவிட்டது. மந்திரிகளின் பொறுப்பு, காங்கிரசின் விசேஷ திட்டங்களாகிய மதுவிலக்கு, ஜமீன்களையும் இனும்களையும் ஒழித்தல், ஆகியவற்றில் மட்டும் காணப்பட்டது.

## 7. மதுவிலக்கு

1. மதுவிலக்கின் பெயரால் நாடானது பழைய வருமான திட்டத்தின்படி, ஆண்டுதோறும் பதினேழு கோடி ரூபாய் வருமானத்தை இழந்து வருகிறது. இப்பெரு நஷ்டத்தை ஈடுசெய்யக்கூடியநன்மை மக்களின் ஒழுக்கத்திலாவது அல்லது வாழ்க்கைத்தரத்திலாவது உண்டாயிருக்கிறதாவென்பதை நாம் அறிய வேண்டும். சென்னை மாகாணத்தைப்பண்டொருகாலத்தில் கண்ணிலாத நாடு என்று கூறுவதுண்டு. ஆனால் அம்மருடம் அதற்கு இப்பொழுதுதான் பொருந்துமெனத் தோன்றுகிறது.

2. சட்ட பூர்வமான மதுவிலக்கு எத்துணைய நலனை அளித்திருக்கிறதென்பதைத் திடமாய் அறிவது எளிதல்ல. இதை அறிவதில் மந்திரிகளின் பொய்ப் பிரசார கூற்றுகளை விட்டுவிட வேண்டும். ஒரு மந்திரி, மதுவிலக்குச் சட்டத்தின் பயனாக, குடிகாரர்களின் சங்கை நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் குறைந்து விட்டதென்கிறார். இன்னொருவர் மாஜி குடிகாரர்களின் மடிகளிலும் பைகளிலும் கோடிக்கணக்கான ரூபாய்கள் குலுங்கி கூத்தாடுகின்றன வென்கிறார். இவர்களில் எவர் பெரிய புளுகர் என்பதை ஆராய வேண்டிய அவசியமில்லை. குடிப்பழக்கம் ஒரு மதிப்பிடக்கூடிய அளவுக்கு குறைந்திருக்கிற தென்று நினைப்பதற்கு கீழே கண்ட விஷயங்கள் இடம் கொடுக்கவில்லை:—

(1) மது விலக்கு வெற்றிபெறவேண்டுமாயின், பொதுமக்களுடைய முழு ஆதரவு—முக்கியமாக குடிகாரர்களுடைய பெண்டு பிள்ளைகளின் உதவி—அவ்வியக்கத்துக்கு வேண்டும். மதுவிலக்குச்சட்டத்தின் கீழ் போலீசார் நடத்தியிருக்கும் பல்லாயிரக்கணக்கான கேசுகளின் ரிகார்டுகளை நாம் பரிசோதிப்போமாயின், குடும்பம் குடும்பமாகவும், கிராமம் கிராமமாகவும், தொடர்ந்தும் இடைவிடாமலும், கட்டுப்பானை சாராயம் காய்ச்சுவதில் ஈடுபட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆண், பெண், பாலர், விருத்தர் ஆகிய அனைவரும் கும்பல் கும்பலாக ஜெயிலுக்குச் செல்லுகின்றனர். புருஷன் சிறைவாசம் செய்யும் காலத்தில், அவன் பெண்ஜாதி, அத்தொழிலை நடத்துகிறாள். அவர்களுடைய குழந்தைகள் அச்சாராயத்தை விற்கின்றனர்.

(2) கள்ளசாராயத்தை உற்பத்தி செய்யும் குடும்பங்கள், தங்களுடைய உபயோகத்துக்காக மட்டுமல்லாமல், விற்பனைக்காகவும் அதை உற்பத்திச்செய்கின்றன. இத்தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் வெளியூர்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இத்தொழில், காங்கிரசு அரசாக்ஷியின் கீழ், ஒரு ஸ்திரமான குடிசைத் தொழிலாக ஏற்பட்டுவிட்டது.

(3) மது விலக்கு விஷயத்தில் போலீசாருடைய திருவிளையாடல்கள் விசித்திரமானவை. இவர்கள், ஒருமாதத்தில், இக்கேசுகளின் சங்கையைக் குறைத்துக் காட்டுவர். அடுத்தமாதத்தில் அதை ஏற்றி விடுவர். ஆனால் நாடெங்கும் இக்குற்றம் நிறைந்திருப்பதை எவரும் காணலாம். காங்கிரசு வாதிகளின் கூக்குரலும் இதைக்காட்டும். மது விலக்கின் தோல்விக்கு ஒருவர் வக்கீல் கூட்டத்தாரின் மேல் சீறி விழுகிறார். இன்னொருவர் கட்குடிக்கு இப்பொழுது விதித்-

திருக்கும் தண்டனை போதாதென்கிறார். இது எவ்வாறு யினும், இச்சட்டத்தினால் கட்குடி குறையவில்லை யென்பது வெளிப்படை.

3 இனி, மது விலக்கின் வெற்றியில் நமது மந்திரிகளுக்கும் காங்கிரசு வாதிகளுக்கும் நம்பிக்கை போய்விட்டதென்பதை, அவர்கள் அத்திட்டத்தைப் போலீசாரிடம் ஒப்படைத்துவிட தீர்மானித்திருப்பதே காட்டும். அவர்களுடைய குரலும் தீன சுரத்தையடைந்துவிட்டது. அவர்கள் பத்து வருஷத்தில் பயனை எதிர்பார்க்கின்றனர். ஆனால் மக்கள் கீழேகண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்:—

(1) கொலை, களவு முதலிய நூற்றுக்கணக்கான குற்றங்கள், பல்லாண்டுகளாக போலீசாரின் பராமரிப்பில் இருந்து வந்திருக்கின்றன. அவை மறைந்தனவா? அவை மறைந்தால், கட்குடியும் மறையும்.

(2) நமதுநாடு புதரும், கரடும், குன்றும், காடும், மலையும் அடர்ந்தது. இவைகளில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கு ஏராளமான வசதிகள் இருக்கின்றன. இவைகளை யணுக போலீசு புலிகளும் அஞ்சுவர்!

(3) கட்குடி மறைவது போலீசாரின் சுயநலத்துக்கு அநுகூலமானதல்ல. நாம் இப்பொழுதிருக்கும் போலீசு படையின் தரத்தைக்கொண்டு இதைக் கூறுகிறோம்.

(4) அமெரிக்காவின் அநுபவமும் உதாரணமும் கட்குடி மறைவதற்கு அநுகூலமானதல்ல.

4. மதுவிலக்குச் சட்டத்தின் தத்துவத்தை மக்கள் நன்றாக உணரவேண்டும். இச்சட்டம் ஒரு புதுமையான

குற்றத்தை உண்டாக்குகிறது. கட்குடியானது கொலை, களவு போன்ற குற்றமல்ல. பிந்தியவை, எல்லா காலங்களிலும், எல்லா நாடுகளிலும், குற்றங்களாக பாவிக்கப்பட்டு வந்திருப்பவை. இவைபிறரைப்பாதிப்பவை. கட்குடி அத்தன்மைத்தல்ல. மதுவிலக்கு மக்களைத் திருத்தி அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தும் சமூக சீர்திருத்த முயற்சிகளைப் போன்றது. நமது நாட்டைத்தவிர்த்து வேறு எங்கும் கட்குடி குற்றமாக பாவிக்கப்படவில்லை. மதுவிலக்கு குற்றத்துக்கும் மற்ற குற்றங்களுக்குமுள்ள அடிப்படையான வித்தியாசத்தை நமது சட்டம் உணரவில்லை. போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்ட எந்த குற்றவாளியும் திருந்தினதை நாம் காணவில்லை. மக்களைத் திருத்துவதற்காக போலீசார் ஏற்பட்டவருமல்லர். இச்சட்டத்தின் மூலமாக நாம் நமது நாட்டின் குற்றவாளிகளின் தொகையை வீணுகப் பெருக்கிக்கொள்ளுகிறோமேயொழிய, இது ஒருபலனையும் நமக்கு கொடுக்காது.

5. இச்சட்டத்தைக் கொண்டு குடிகாரனை மிரட்டி, அவனைத் திருத்தமுடியாது. அவனுக்கு சமாதானமுறையில் புத்தி புகட்டி, அவனைப்படிபடியாகத் திருத்தவேண்டும். அது மிகவும் கடினமானகாரியம். அதைச்செய்ய நமது காங்கிரஸ்காரர்களுக்கு அவகாசமும் மனப்பான்மையும் கிடையாது. தங்களுடைய பதவியைப் பணமாக்கி கொள்ளுவதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

6. குடிக்காரனை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு அவன் பெண்டு பிள்ளைகளைத்திக்கற்று தெருவில் விட்டுவிடுவது அவனைத்திருத்தும் வழியாகுமாவென்பதையும் நாம் யோசிக்கவேண்டும். இவ்விஷயத்தை நமது சட்டம் கவனிக்கவே இல்லை.

7. இச்சட்டத்தை மாற்றாது வைத்துக்கொள்வதற்கு காங்கிரசுவாதிகள், இரண்டு காரணங்களைக் கூறுகின்றனர். ஒன்று, கட்குடி நின்றால் ஏழைமக்கள் உய்வரென்பதும், மற்றொன்று, கட்குடியை ஒழிக்கும் முயற்சி மகாத்மாஜிக்கு மிகவும் உகந்ததென்பதும். இவையிரண்டையும் மறுப்பார் யாருமில்லை. ஆனால் மகாத்மாஜி கோரியது உண்மையான, நடைமுறையில், காணப்படும் மதுவிலக்கேயொழிய, வெறும் மதுவிலக்குச் சட்டமல்ல. அவர் ஒருபொழுதும் ஏட்டுச் சுரைக்காயை விரும்பவில்லை. ஏழை மக்களைக்காப்பாற்றக் கூடியதும் கட்குடி ஒழிந்துபோவதேயொழிய, வெறும் மது விலக்குச் சட்டமல்ல.

8. இச்சட்டத்தினால் சில தீங்குகளும் ஏற்படுகின்றன:—

(1) முன்பு கள்ளுக்காக தினத்துக்கு நாலணா செலவு செய்த குடிகாரன் இப்பொழுது கள்ளச்சாராய புட்டி ஒன்றுக்கு ஒரு ரூபாய் செலவிடுகிறான். இச்சாராயம் கிடைக்காத சமயத்தில் இவன் சீமை எண்ணெயையோ, ஸ்பிரிட்டையோ, அல்லது வேறு ஆபாசத்தையோ, உட்கொண்டு, தன்னுடைய வெறியைத் தணித்துக் கொள்ளுகிறான். இவை இவன் உடலைக் கெடுத்து இவனுக்குப் புது நோய்களை உண்டாக்குகின்றன.

(2) இச்சட்டம், அனாவசியமாக, போலீசாரிடத்தில் லஞ்ச ஆசையை உண்டுபண்ணுகிறது. அதற்கு வேண்டிய வசதிகளையும் அவர்களுக்குக் கொடுக்கிறது. குடிப்பழக்கமானது ஏழையென்றும்பணக்காரனென்றும் வித்தியாசத்தைப் பாராட்டுகிறதில்லை. அநேக பணக்கார குடிகாரர்கள் போலீசாருக்கு ஒப்பந்தப்படி கப்பம் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். போலீசார் கேசு செய்யும் காலங்களிலும், அவர்கள் தகுதி

யுள்ள, உபயோகமான புள்ளிகளை நீக்கி, மற்ற ஏழைகள் பேரில் கேசைத்தொடர்ந்து தங்களுடைய சுருசுருப்பைக் காட்டிக்கொள்ளுகின்றனர். போலீசார்பேரில் குறைகூறுவது சந்தோஷமான காரியமல்ல. ஆனால் அவர்களுடைய வாழ்க்கையின் மாதிரியை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு சாதாரண போலீசு சப்இன்ஸ்பெக்டருக்கு, குறைந்தது மூன்று பெட்டி சிகெரெட்டில்லாமல், ஒரு நாள் கழியாது. இந்த தரத்திலதான் அவர் மற்ற செலவுகளும் செய்கிறார். இச்செலவுகளுக்குப் பணம் எங்கிருந்து வருகிறதென்பதை மக்கள் கவனிப்பார்களாக!

(3) கிராமங்களில்பொய்க்கேசுகளை உற்பத்திசெய்து, அங்குள்ள கட்சி விரோதங்களை நிலைக்கும்படி செய்வதற்கு, இச்சட்டம் இடம் கொடுக்கிறது.

(4) நாடு உணவுப்பொருள்கள் இல்லாமல் தவிக்கும் தருவாயில், பல்லாயிரக்கணக்கான விவசாய உழைப்பாளிகளைச் சிறைக்கனுப்புவது மடமையாகும்.

9. ஆனால் அறிவாளிகளாகிய காங்கிரசுவாதிகள், இப்பயனற்ற சட்டத்தை ஒழிக்கவோ அல்லது திருத்தவோ இடம் கொடுக்காததற்கு காரணமென்னவென்று மக்கள் வினவலாம். அதற்கு விடை இரண்டுளது:—

முதலாவது: முன்வைத்தகாலைப் பின்வாங்கக்கூடாதென்பது. அவ்விதம் பின்வாங்குவது காங்கிரசின் பெருமைக்கு இழுக்கு. இரண்டாவது இச்சட்டம், கட்குடியை நிறுத்தாவிடினும், தேர்தல்களில், சக்திவாய்ந்த ஆயுதமாக விளங்குமென்பது.

10. கள்ளுண்ணல்பற்றி, வள்ளுவனாரின் பொய்யா மொழிகளையும், நாம் உணரவேண்டும்.

> "கையறியாமையுடைத்தே, பொருள் கொடுத்து
> மெய்யறியாமை கொளல்".
>
> "உண்ணற்க கள்ளை, உணில் உண்க சான்றோரா
> னெண்ணப்பட வேண்டாதார்".

கள்ளுண்ணல் ஒருவனுடைய சொந்த ஒழுக்கத்தைப்பற்றிய இழுக்கென்பதே அப்பெரியாருடைய எண்ணமும்.

11. மதுவிலக்குச்சட்டத்தை ஒழிப்பதும் திருத்துவதும், அடுத்த தேர்தலில், பொதுமக்களின் வாக்கைப் பொறுத்ததாக இருக்கிறதென்பதை அவர்கள் உணரவேண்டும்.

## 8. ஜமீன்களும் இனும்களும்.

1. ஜமீன்களில் உள்ள நிலங்களை உழும் குடியானவர்களுக்கு, அவைகளில், ஏற்கனவே, குடிவார பாத்தியம் ஏற்பட்டிருந்தது. அந்நிலங்களை விற்கவும், வாங்கவும் அவர்களுக்கு பாத்தியமிருந்தது. காங்கிரசசரசாங்கம் அவர்களுக்கு இந்நிலங்களில் யாதொருபுது பாத்தியத்தையும் கொடுக்கவில்லை. ஆனால், அது, ஜமீன்தார்களை ஒழித்துவிட்டு, ஜமீன்களையும் ரயத்துவாரி கிராமங்களாக்கிவிட்டன. இதில் எழும் பிரச்னை ஜமீன்தார்களுக்கு கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டைப் பொறுத்ததாகும்.

2. இனும் கிராமங்களில் சில, சட்டப்படி, ஜமீன்களுக்கு ஒப்பாக இருந்தன. அவைகளிலும் நிலங்களை உழும் குடியானவர்களுக்கு குடிவார பாத்தியம் ஏற்பட்டிருந்தது. மற்ற இனும் கிராமங்களில், நிலங்கள், உழும் குடியானவர்க

ளுக்கு பாத்தியப்பட்டிருக்கவில்லை. அவைகள் இனாம்தார்களுக்கு பாத்தியப்பட்டிருந்தன. இந்த கிராமங்களில்தான் இனாம்தார்களுடைய நில பாத்தியத்தைப் பிடுங்கி, அதைக் காங்கிரசு அரசாங்கம், உழும் குடியானவர்களுக்கு கொடுத்தது. இதுபெரும் கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று.

3. நிலத்தினுடைய பாத்தியம் இந்நாட்டில் பெரிதும் விலையுள்ளது. ஜமீனாக பாவிக்கப்படாத இனாம் கிராமங்களில், உழும் குடிகளுக்கு, காங்கிரசு அரசாங்கம், குடிவார பாத்தியத்தைக் கொடுத்தது ஞாயமாகத் தோன்றலாம். ஆனால் அது அப்பரிமுதலுக்கு இனாம்தார்களுக்கு, தகுந்தபடி, நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டிருந்தது. இந்த விஷயத்தில் இனாம்களின் ஆரம்ப கதைகளை ஆராய்வது வீண் காரியமாகும். அநேகர் அவைகளைச்சமீபத்தில் பெருத்த விலை கொடுத்து வாங்கியிருந்தனர். அவைகள், பல தலைமுறைகளாக, இனாம்தார்களால் சொந்த சொத்துக்களாக பாவிக்கப் பட்டும் அநுபவிக்கப்பட்டும் வந்தன. ஆஸ்திகளின் மூலங்களை ஆராய்ந்தால் அநேக மோசங்கள் வெளிவரும். இவைகளைக் காரணமாகக் கொண்டு அந்த ஆஸ்திகளைப் பிடுங்கிக் கொள்வது ஞாயமாகுமா? ஜமீன்கள் விஷயத்திலும் அவைகளை இழக்கும் ஜமீன்தார்களுக்கு, அவர்களுக்கு ஏற்படும் வருமான நஷ்டங்களின் அளவுக்கு, நஷ்ட ஈடு கொடுக்க, அரசாங்கம் கடமைப்பட்டிருந்தது. இனாம்களின் மூலத்தைவிட ஜமீன்களின் உற்பத்தி மோசமாக இருக்கலாம். ஆனால் அதை வற்புறுத்துவது பொருந்தாது.

4. ஜமீன்களையும் இனாம்களையும் ஒழித்தலாகிய விஷயம் ரெவினியூ மந்திரி திரு கலா. வெங்கட்ராவ் அவர்களுடைய பொறுப்பாக இருந்தது. இவர் மகா முரடர். ஜமீன்தார்களிடத்திலும் இனாம்தார்களிடத்திலும் மாறாத விரோ

தத்தைக் கொண்டவர். அவர்கள் கோரிய நஷ்ட ஈட்டின் நேர்மையை இவர் உணர முடியவில்லை. இவருடைய அநீத மான முறைகளுக்கு மக்களின் வெறுப்பைக் காட்டுவதற்காக அவர்கள் இவரைக் கருப்பு வெங்கட்ராவ் என்று அழைத்த னர். (தேசீய பாஷையில், "காலா" என்னும் சொல்லுக்கு கருப்பு என்பது பொருள். "காலா" என்பது "கலா" என்று குறுகினதாகவும் தமிழர் கொண்டனர்).

5. காங்கிரசுகாரர்கள் இயற்றிய சட்டங்கள் அவசரத் துக்கு பேர் போனவை. ஒரு திட்டத்தின் சாதக பாதகங் களை ஆராய்ந்து அதை இயற்றுவது அவர்கள் வழியல்ல. அவர்களிற் பலருக்கு அவைகளை ஆராயும் திறனும் கிடை யாது. அவர்கள் கக்ஷி கோஷங்களைப் பின்பற்றி நடப்பவர். காங்கிரஸ்காரர்கள் மக்களின் நன்மையைக் கருதி இயற்றிய சட்டங்களிலும் குற்றங் குறைகள் மலிந்திருந்தன. மேற் கூறிய ஜமீன், இனும் சட்டங்கள் மிகவும் சிக்கலானவை. ஜமீன்தார்களுக்கு கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டை நிர்ண யிப்பதுடன், அதைச் செலுத்த வேண்டிய முறையையும் கெடுக்களையும் நிர்ணயிக்க வேண்டியிருந்தது. இனும்தார் களுக்குச் செலுத்த வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகைகளை அவர்களுடைய நிலங்களை அடையும் குடிகள் செலுத்த வேண்டியது தகுதியாகும். பொது மக்களுடைய வரிப் பணத்தை அதற்குச் செலவிடுவது ஞாயமாகாது.

6. குடியானவர்கள் விஷயத்தில் நாம் முக்கியமான ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. அவர்கள் தங்களைத் தாங்களே, காப்பாற்றிக்கொள்ள முன்வரும் வரையில், எந்த சட்டமும், அவர்களுக்கு கோரிய பலனை அளிக்காது. அவர் கள், தங்களுடையவருவாய்க்குள், தங்களுடையசெலவுகளைக் குறுக்கிக் கொள்ளும் வழக்கத்தைக் கற்க வேண்டும். இப்

பொழுதிருக்கும் பழக்கத்தின்படி, அவர்கள் கடன் வாங்க அஞ்சாதவர்கள். நிலத்தின் ஆதாரத்தின் பேரில் கடன் கிடைக்காவிட்டால், கோரிய கடன் தொகைக்கே, நிலத்தை விற்றுவிடவும் பின் வாங்காதவர்கள்.

7. 1938 ௵-ல் காங்கிரசு அரசாங்கம் இயற்றிய விவசாயிகளின் கடன் நிவாரண சட்டமும் நமது குடியான வர்களுக்குப் பலனைக் கொடுக்கத் தவறிவிட்டது. இச்சட்டத் துக்குப் பின்னர் இவர்கள், கொதவை வைப்பதற்கு பதிலாக, தங்கள் நிலங்களை விற்பனை செய்து கடன்வாங்கி வந்திருக்கின் றனர். ஆகையால், பஞ்சாபு பிரதேசத்தைப் போல், நாமும், குடியானவர்களுடைய பராதீனபாத்தியத்தை யொடுக்கி சட் டம் இயற்றினலொழிய, இப்பொழுது அவர்களுக்கு கிடைத் திருக்கும் இனும் நிலங்களும் அவர்களைவிட்டுச் சீக்கிரம் அகன்றுவிடுமென்பது திண்ணம்.

## 9. கிராம உத்தாரணம்.

1. கிராமங்களுக்கு புத்துயிரைக் கொடுத்து அவை களைச் சீரும் சிறப்பும் எய்துமாறு செய்வது சுலபமான காரி யமல்ல. அது மலையைப் போன்றது. அப்படியிருக்க, காங் கிரசு அரசாங்கம், பிர்க்கா அபிவிருத்தி டிபார்ட்டுமெண்ட் என்று ஒன்றைஏற்படுத்தியிருப்பது வீண்படாடோபமாகும். அதுமக்களுக்கு ஒரு நன்மையும்செய்யக்கூடியதல்ல. கிராமங் கள் தங்களுடைய கடமைகளைச் சரிவர செய்ய வேண்டுமா னல் அங்கு காணப்படும் கக்ஷி பேதங்கள் மறைய வேண் டும். இவைகள் மறைய வேண்டுமாயின் இவைகளுக்கு காரண பூதர்களாகிய கிராமாதிகாரிகளின் ஆதிக்கம் ஒழிய வேண்டும்.

2. கிராம சீர்திருத்தங்கள் அடிப்படையாக இருக்க வேண்டும். கிராம பஞ்சாயத்துகளுக்கு கிராமத்திலுள்ள எல்லா சிப்பந்திகள்பேரிலும், எல்லா ஸ்தாபனங்களின்பேரிலும், பூர்ண அதிகாரம் இருக்கவேண்டும். கிராமாதிகாரிகளைச் சிக்ஷிக்கவும் நீக்கவும் அதற்கு அதிகாரம் இருக்கவேண்டும். கிராம பள்ளிக்கூடம், கிராம ஆஸ்பத்திரி ஆகியவை அவர்களுடைய பரிபாலனத்தில் இருக்க வேண்டும். கிராமங்களுக்கு சம்பந்தப்பட்ட போக்குவரத்து சாதனங்களை ஏற்படுத்துவதும், அங்குவேண்டிய மோரிகள் பாலங்கள் ஆகியவைகளைக்கட்டுவதும், கிராம பஞ்சாயத்தின் வேலையாக இருக்கவேண்டும்.

3. இந்த மாகாணத்தின் வருமானத்தை இரண்டாகப்பிரித்து ஒருபாகத்தைக் கிராமத்தின் உபயோகத்துக்கு ஒப்படைக்கவேண்டும். கிராமங்களுக்காக தனி மந்திரியோ, மந்திரிகளோ இருக்கவேண்டும். கிராம சுகாதாரம், கிராம கல்வி, கிராம போக்குவரத்து சாதனங்கள், கிராம வைத்தியம் ஆகியவைகள் எல்லாம் இம்மந்திரிகளின் பரிபாலனத்தில் இருக்கவேண்டும்.

4. கிராமங்களின் குடியிருப்பு பாகங்கள் கூடுமான வரையில் மேடுபள்ளமில்லாமல் சமமாகச் செய்யப்பட்டு, அங்கு விழும் மழைத்தண்ணீரும், வீட்டுத்தண்ணீரும் வெளியில்போக வசதி செய்துகொடுக்கவேண்டும். கிராம ஜனங்களுக்கு குடிக்கத் தண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டும். ஒவ்வொரு குடியானவனுக்கும் தனித்தனி எரு குழி இருக்கவேண்டும். சாகுபடிக்குவேண்டிய எல்லா சவுகரியங்களும் செய்துகொடுக்க பஞ்சாயத்துக்கு வசதிகள் இருக்கவேண்டும். கிராம விவசாயத்தைச் சீர்ப்படுத்துவது பஞ்சாயத்தின் கடமையாக இருக்கவேண்டும்.

5. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒருகூட்டுறவு சங்கம் இருக்கவேண்டும். இச்சங்கம் குடியானவர்களுடைய மாசூலை விற்றுக்கொடுக்கவும், அவர்களுக்குவேண்டியசாமான் களை அவர்களுக்கு விற்கவும், வேண்டும். அவர்களுடைய சொத்துக்களின்பேரிலும் மாசூலின்பேரிலும் அவர்களுக்கு கடனும் கொடுக்கவேண்டும். இப்படி அடிப்படையான திட்டங்கள் கிராமங்களின் உத்தாரணத்துக்குத்தேவையாக இருக்க, காங்கிரசு சர்க்கார் செய்திருப்பவை முழுதும், வெறும்மேல்பூச்சும், கண்துடைக்கும் வித்தையுமாகும். இப்பொழுது இயற்றப்பட்டிருக்கும் கிராம பஞ்சாயத்து சட்டமும் காங்கிரசு ஆக்ஷியை கிராமங்களில் வலுப்படுத்துவது உண்மையான அநுதாபமாவது அன்பாவது குடியானவர்கள்பால் காங்கிரஸ்காரர்களுக்கு இல்லையென்றுசொல்லலாம்.

6. காங்கிரசு ஸ்தாபனத்திடமிருந்து "வீரன்" என்கிற அத்தாக்ஷிப்பத்திரத்தைப் பெற்ற ஒவ்வொருவனுக்கும் இக்காங்கிரசு சர்க்கார் தங்கள்வசமிருக்கும் பூமியை, புஞ்சை நிலமாயின் 10 ஏக்காரவும், நஞ்சை நிலமாயின் 5 ஏக்காரவும் "வீரமான்ய" மாக அளிக்கிறது.

7. கிராமாந்தரங்களில், கிராமவாசிகள் சர்க்கார் காம்பு நிலங்களை ஆக்கிரமித்து, தேகப்பிரயாசைப்பட்டும் பணச்செலவு செய்தும், அவைகளிலுள்ள புதர் சப்பாத்தி முதலியவைகளை நீக்கியும், மேடு பள்ளங்களைச் சமப்படுத்தியும், அவைகளைச் சாகுபடிக்கு லாயக்காகச்செய்து, அவைகளுக்குப் பல்லாண்டுகளாக சிவாஜமா தீர்வை செலுத்தி, அவைகளைச் சாகுபடி செய்து அநுபவித்து வருகிறார்கள். சர்க்கார் விதிகளின்படியே இந்த நிலங்கள் இச்சிவாஜமா சாகுபடிதாரர்களுக்கு வெகுகாலத்துக்குமுன்பே அடமானம் ஆயிருக்கவேண்டியவை. ஆனால் கிராம கர்ணங்களின் சூழ்ச்

சியினால், அவர்கள் பெருந்தொகைகளைச் சாகுபடிதாரரிடம் பெற்றுக்கொண்டிருந்தும், இவைகள் அடமானமாகாமலே இருந்துவந்தன.

8. காங்கிரசு சர்க்கார் காங்கிரசு வீரர்களுக்கு "வீர மான்யம்" வழங்குவதாகத்தீர்மானித்தவுடன், இவ்வீரர் களுடைய கண்கள் எல்லாம் இந்த ஏழைக் கிராமவாசிகளிட மிருந்த மேற்கூறிய சிவாஜமா நிலங்களின்பேரிலேயே பாய்ந்தன! ஒரு அரசாங்கத்தையே துணையாகக்கொண்ட அந்த வீரர்களின் பேராசையின் முன்பு, ஏழைக் கிராமவாசி யின் பாத்தியம் நிலைக்குமா? இந்த விஷயத்தில், ஞாயத் தைப்பெற, கிராமவாசிகள் பட்டபாட்டுக்கு அளவே இல்லை. கிராமங்களை உத்தாரணம் செய்வதாக காங்கிரசுக்காரர்கள் பறைசாற்றுவதெல்லாம் வீண் பேச்சு. இதைக் கிராமவாசி களே அறிவர்.

## 10. ஆக்ஷித்திறம்.

1. ஒரு நாட்டையாள்வோருக்கு எந்த காரியத்தை முதலில் செய்வது என்பதும், எதைப்பின் செய்வதென்ப தும் நன்றாகத் தெரியவேண்டும். விலைவாசிகள் உயர்ந்து நாடு அல்லோலகல்லோலத்தில் இருந்தது. லஞ்சப்பேய் தலை விரித்தாடினவண்ணமிருந்தது. காங்கிரஸ்காரர்கள் அறனற்ற முறையில் பொருளீட்டி வந்தனர். இவைகளைக் கண்ட கீழ்தர சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் உபாத்தியா யர்களும் சம்பள உயர்வை வேண்டினர். ஆனால் காங்கிரசு சர்க்கார் இவர்களுடைய வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கா மல், காங்கிரசுகாரர்களின் கூக்குரலுக்கு இணங்கி, அவர் களுடைய சம்பளம் முதலியவைகளை உயர்த்தினர். இது அச்சிப்பந்திகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் பெருத்த

அதிருப்தியை கொடுத்தது. அநாமதேயங்களடங்கிய இச் சர்க்கார் பொது மக்களின் மதிப்பையும் பெற்றிலர். இவை காரணமாக, அதுவரை கண்டிராத வேலை நிறுத்தத்தைச் சர்க்கார் கீழ்தர சிப்பந்திகளே கெஜட் (பிரசுரம் பெறுத உத்தியோகஸ்தர்கள்) துணிச்சலுடன் துவக்கினர். உபாத்தி யாயர்களும் பெருத்த ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர்.

2. ஜமீன் குடிகளுக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே குடிவார நில பாத்தியம் ஏற்பட்டிருந்தது. ஜமீன்தார்களை ஒழிப்பதற்கு யாதொரு அவசரமும் இருக்கவில்லை. அது நிதானமாகச் செய்யக்கூடியது. ஜமீன்தார்களை, ஆதிசோள்ளைக் கூட்டத்தாரென்று சொல்லி, நஷ்ட ஈடு கொடுக்காமல், அவர்களைத் தெருவில் விரட்டிவிடுவது சாத்தியமல்ல. அவ்விதம் செய்தால், சர்க்காரின் நாணயமும் கவுரவமும் குலைந்துவிடும். மக்களுக்குச் சர்க்காரின் நல்லெண்ணத்திலுள்ள நம்பிக்கையும் போய்விடும். நாட்டின் அபிவிருத்திக்காக, பல துறைகளிலும் பணம் செலவு செய்ய கடமை பட்டிருந்த, ஒரு இளம் அரசாங்கம், ஆரம்பத்திலேயே, ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய தொல்லையை வரவழைத்துக் கொண்டது அறிவின்மையாகும்.

3. எந்த அரசாங்கமும் தன்னுடைய பொருளாதார நிலையைச் செம்மையாகப் பாதுகாக்க வேண்டும். நேரக் கூடிய அவசிய செலவுகளுக்கு வேண்டிய பணம் அதன் கையில் எப்பொழுதும் மிகுதியாக இருக்கவேண்டும். வரண்ட கஜானவைக் காட்டும் அரசாங்கம் ஒரு நிமிஷம் கூட நிலைக் காது. மக்களுக்கு விதிக்கும் வரிகளும் லகுவாக இருக்க வேண்டும். மக்கள் அவைகளை ஒரு சுமையாக உணர முடியாதவையாக இருக்க வேண்டும். நமது காங்கிரசு அரசாங்கம் விதித்தவரிகளோ சாதாரண மக்கள் தாங்க முடி

யாதவை. ஆனால் இதே அரசாங்கம் கோயமுத்தூர் முதலிய இடங்களில்வாழும் பொருள் படைத்தோர்பால் எதிர்பாராத, பணிவைக் காட்டுகிறது. வரிப்பணங்களை முன்னுடியாகவும் அட்வான்சாகவும், கேட்பதும், அவைகளை நிர்ணயிப்பதிலும் வசூலிப்பதிலும் இதன் உத்தியோகஸ்தர்கள் மிரட்டலும் உருட்டலும் காட்டுவதும் இதன் மதிப்பைப் பெரிதும் குறைத்திருக்கின்றன.

4. இச்சர்க்காரின் அநேக அவசரச் சட்டங்கள், கண்ட்ரோல்கள், மதுவிலக்குத் திட்டம் ஆகியவை அதிகாரிகளின் ஒழுங்கீனத்துக்கு இடம் கொடுக்கின்றன. இச்சட்டங்கள் ஒழிந்தாலொழிய அவர்களிடம் நேர்மையான நடத்தையை எதிர்பார்க்க முடியாது. சர்க்கார் அதிகாரிகளிடம் குடிகொண்டிருக்கும் லஞ்சப் பழக்கத்தையொழிக்க, இவ்வரசாங்கம் கையாளும் முறை போதுமானதல்ல. நாடு முழுதும் லஞ்சப் பழக்கத்துக்குட்பட்டிருக்க, வாரம் இரண்டொருவரைத் தண்டிப்பதோ அல்லது வேலையிலிருந்து நீக்குவதோ இதைப் போக்காது. இது சமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைப்பதையொக்கும்.

5. கள்ள வியாபாரம் இனியும் இந்நாட்டை விட்டு நீங்கினபாடில்லை. கள்ள வியாபாரிகள் அநீத முறையில் சம்பாதிக்கும் பொருள் முழுதும் சர்க்காரைச் சேர வேண்டியவை. கள்ள வியாபாரி என்று ஒருவன் தீர்மானிக்கப்பட்டால் அவன் அந்த வியாபாரத்தில் சம்பாதித்த பொருள் முழுவதையும் அடையும் பாத்தியம் சர்க்காருக்கு இருக்க வேண்டும். இந்த விஷயத்தை நமது சர்க்கார் கவனிக்கவே இல்லை. காங்கிரஸ்காரர்களின் துணை கள்ள வியாபாரிகளை விட்டு அகன்றுவிட்டதென்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

6. நம்முடைய மந்திரிமார்களின் அலைச்சலுக்கு அளவே இல்லை. அவர்களுக்கு ஓய்வு ஒழிவு என்பன கிடையாது. நாட்டில் அவர்கள் திறந்து வைக்காத ஸ்தாபனம் கிடையாது: பேசாத கூட்டம் கிடையாது. ஒரு மந்திரி ஒரு பிஸ்கோத்து உற்பத்திசாலையைத் திறந்து வைத்ததாகத் தெரிகிறது. அவருடைய எண்ணத்தில் அது உணவு பிரச்னையுடன் சேர்ந்ததாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு விஷயங்களை அறியும் சக்தி மிகவும் மட்டு. ஒரு மந்திரி ஒரு நகர சபையால் நடத்தப்பட்ட சுதேசி பொருட்காக்ஷியைத் திறந்து வைத்தார். அவர் நுழைந்த வாயிலின்மேல் மகாத்மாஜியின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கிருபுறத்திலும் "மூன்று தாமரை" பீடியின் விளம்பரம், பெருத்த தோரணையில், ஆடம்பரமாக, தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இச்செயல் கனம் மந்திரியின் கவனத்தைக் கவரவில்லை. தமிழருடைய வாழ்க்கையில் புகையிலைக்கு விசேஷ சலுகை உளதோவெனவும் நினைக்க வேண்டியிருக்கிறது. புகையிலையென்பது தனித் தமிழ்ச் சொல். காரணப்பெயர். புகைக்க வேண்டிய இலை புகையிலையெனக் கொள்க. அதைப் புகைக்க வேண்டிய விதமும் சுருட்டிச் செய்வதாகும். இத்தமிழ் "சுருட்டையே" பிறர் "செரூட்" என்றனர். ஒன்று மற்றொன்றின் சிதைவு. ஆதலால், புகையிலையைத் தமிழருடைய பண்டை நாகரீகத்துடன் உறவு கொண்டதாக நினைக்க காரணங்கள் இருக்கின்றன.

7. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் தமிழ் மந்திரிகள் அனைவரும் தவறாத திறமையைக் காட்டுவர். அதாவது, பார்ப்பன சமூகத்தைக் கட்டின கட்டு நழுவாமல், அடக்கியும் ஒடுக்கியும் வைப்பதில். இத்தனிப் பெரும் தகைமையில் ஒரு மந்திரியும் மற்றவருக்கு இளைக்கார். இவ்வரும்

பெரும் திறனே, ஒரு கருவேப்பங்கொம்பினும் சீர்குறைந்த ஒருவரை இந்நாட்டின் முதன் மந்திரியாகவும் உயர்த்திற்று; தமிழரின் பெருமையே, பெருமை!!

## 11. பார்ப்பனத் துவேஷம்.

1. தமிழ்நாட்டின் விசேஷ பெருமை, அதின் கற்றவர், பார்ப்பனர்பால் காட்டும் பகைமையாகும். இத்தீவினை, சென்ற முப்பத்துமூன்று ஆண்டுகளாக, அதன் அறிவாளிகளால் பாடுபட்டு வளர்க்கப்பட்டுவருகிறது. நாடு சுதந்திரமடைந்தபின், அப்புனிதக்காற்று தமிழகத்திலும் வீசி, அதைத் தூய்மைப்படுத்துமென பலர் நினைத்தனர். ஆனால் அது வீண் கனவாயிற்று.

2. ஒரு நாட்டின் சர்க்கார் கல்லூரிகள் அந்நாட்டு மக்களின் பொதுப்பணத்தைக்கொண்டு நடைபெறுகின்றவை. அந்நாட்டைச் சேர்ந்த எவனையும், அவனுடைய வகுப்பு அல்லது மதம்பற்றி, அக்கல்லூரிகளில் பயிலுவதினின்றும் விலக்க அந்நாட்டுச் சர்க்காருக்கு அதிகாரமில்லை. ஆனால் அக்கல்லூரிகளில் சேருவதற்கு குறைந்த தேர்ச்சியையும், சம்பளம் முதலியவற்றையும் அச்சர்க்கார் விதிக்கலாம். இத்தேர்ச்சியைப் பெறாதவனையும், சம்பளம் முதலியவற்றை செலுத்த முடியாதவனையும், சர்க்கார் அவைகளிற் சேர்க்க மறுக்கலாம். கல்லூரியில் உள்ள இடத்துக்கு மேல் அபேக்ஷகர்கள் இருந்தால், அதிகதேர்ச்சி பெற்றவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதுதான் முறை.

3. ஆனால் தமிழ் நாட்டின்வழி அதுவன்று. இச்சர்க்கார் நடத்தும் தொழில் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் (அதாவது, வைத்திய கல்லூரி, என்ஜினீரிங் கலாசாலை,

விவசாய கல்லூரி, விலங்கு சிகிச்சை கல்லூரி, காட்டிலாகா கல்லூரி, உபாத்தியாய கல்லூரி, ஆகியவும் பிறவும்) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு, அவர்கள் நமது மாகாண ஜன சமூகத்தைப் பார்ப்பனரென்றும், பார்ப்பனரல்லாதாரென்றும் இரண்டாகப் பிரித்திருக்கின்றனர். பார்ப்பனருக்கு நூற்றுக்கு விகிதம் இக்கல்லூரிகளில் இடத்தை வகுத்திருக்கின்றனர். மற்ற இடம் அனைத்தையும் பார்ப்பனரல்லாதாருக்கே—அவர்கள் இடம் மறுக்கப்பட்ட பார்ப்பனரைக்காட்டிலும் மிகவும் குறைந்த தேர்ச்சியை பெற்றிருந்தபோதிலும்—அளிக்கின்றனர்.

4. கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் புத்தி நுட்பமும் தேர்ச்சியுமுள்ளவர்களுக்குப் பயிற்சி கொடுத்தால், அவர்கள், தங்களுடைய மேதையால், தாங்கள் கற்ற கல்வியையும் மேம்படுத்துவர், நாட்டுக்கும் விசேஷ சேவைபுரிவர். ஆனால் கல்வியிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவகொள்கையைப் புகுத்திய தமிழ்ச்சகோதரர்கள் கல்வியின் மேம்பாட்டையோ அல்லது மக்களின் நன்மையையோ கருதினவரல்லர். இவர்கள், கல்வியை விபசாரப்படுத்தி, அதனால் சம்பாதிக்கும் வருமானத்தைப் பிரித்துக்கொள்ளும்முறையில், கல்வி கற்கும் வசதியையே பிரித்திருக்கின்றனர். சில பார்ப்பன மாணவர்களுக்கு கல்வி சாலைகளில் இடமளிப்பது, தகுதியுள்ள மற்ற பார்ப்பன மாணவர்களுக்கு, கல்வி கற்க வசதி மறுப்பதை, நீதியாக்குமா ?

5. நாட்டின் நிர்வாகம் திறம் படவும் நேர்மையாகவும் நடைபெறவேண்டுமாயின், அதின் உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் ஆற்றல் படைத்தவர்களாகவும் சீலமுடையோராகவும் இருக்கவேண்டும்—இவர்களை நேமிக்கும் விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப் புகுத்து

வது சிறிதும் பொருந்ாது. முதலாவது, தக்க சிப்பந்தி களைத் தெரிந்தெடுப்பதில் பெருந்த கஷ்டமேற்படும். இரண்டாவது நேமிக்கப்பட்ட சிப்பந்தியும், தனக்கு காட் டப்பட்ட சலுகையினுல் இருமாப்படைந்து, ஊக்கத்துடனு வது ஒழுங்காகவாவது தன்னுடைய கடமையைச் செய்ய மாட்டான். மூன்ருவது, சிப்பந்திகளுக்குள் மனக்கசப்பும் வேற்றுமையும் இருந்துகொண்டே இருக்கும். அரசாங்க வேலே நேர்மையாக நடைபெருது.

6. வேண்டிய தேர்ச்சிபெற்ற எவனையும், அவனுடைய ஜாதி அல்லது மதம் காரணமாக, சர்க்கார் உத்தியோகத்தி லிருந்து விலக்குவது நீதியாகாது. சர்க்கார் உத்தியோகங் கள் சொந்த சொத்தல்ல. அவைகளைப் பகிர்ந்துகொள்ளு வது தகாது. அவ்விதம் செய்வதினுல் அரசாங்கத்துக்கு கேடு ஏற்படும். அவ்வுத்தியோகங்களின் மதிப்பும் குன்றி விடும். பார்பபனரல்லாதாரில் தனித்தொகுதியோர் தங்க ளுக்குத் தனி பாகமும் வேண்டலாம். இவ்விதமான உட் பிரிவினைகள் அநேக சிக்கல்களுக்கும் சச்சரவுகளுக்கும் இடம் கொடுக்கும்.

7. தமிழ் நாட்டுமக்கள் பல ஜாதிகளாகப் பிரிந்திருக் கின்றனர். "பள்ளி, பறை பதினெட்டு ஜாதி" என்பது தமிழ் வழக்கு. ஈண்டு பதினெட்டென்பது பன்மையைக் குறிக்கும். இஜ்ஜாதிகளுக்குள் உண்பனை தின்பனை சாதா ரணமாக உண்டு. ஆனுல் கொள்வனை, கொடுப்பனை அறவே கிடையாது. பார்ப்பனர்களும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்திருக்கின்றனர். இவர்களுக்குள்ளும் உண்பனை, தின் பனை சாதாரணமாக உண்டு. ஆனுல் கொள்வனை கொடுப் பனை கிடையாது. சென்ற பல ஆண்டுகளாக, நமது நாட்டில் சமூக சீர்திருத்த முயற்சிகள் நடந்துவந்திருப்பினும்,

அவைகளால் இஜ்ஜாதிகளை ஒழிக்க முடியவில்லை. எனினும், மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். பார்ப்பனர், கல்விகற்று, சர்க்கார் உத்தியோகத்தையே, பிழைப்புக்கு முக்கிய ஆதாரவாக கொண்டுவந்தனர். மற்ற வகுப்பினரில் கற்ருேர் எண்ணிக்கை குறைந்திருந்ததெனினும், அவர்களுள்ளும் கல்வியிற் சிறந்த அறிவாளிகள் தோன்றி வந்தனர். அவர்கள் பெருத்த பதவிகளையும் உத்தியோகங்களையும் வகித்து வந்தனர். இற்றைக்குச் சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னர் சில பார்ப்பனால்லாத பிரமுகர்களுக்கும் சில பார்ப்பனருக்கும் சில சொந்த விரோதங்கள் ஏற்பட்டன. அவைகளை முன்னிட்டு, "ஜஸ்டிஸ்" கக்ஷி என்ற பெயருடன் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஒன்று தோன்றிற்று. இதின் ஒரே நோக்கம், தமிழ் நாட்டில், பார்ப்பனருடைய செல்வாக்கை அழிப்பதென்பது. இவ்வியக்கத்தின் விளைவாக, பார்ப்பன சமூகம் அளவிலாத வசைக்கும் அவதூருக்கும் இலக்காயிற்று. பார்ப்பனருடைய கலைகளும் இலக்கியங்களும் கேலிக்கூத்தாயின. தனிப்பட்ட பார்ப்பனர் இகழப்பட்டனர், நிந்திக்கப்பட்டனர், மானபங்கப்படுத்தப்பட்டனர். பார்ப்பன மங்கையரும் இத்தீங்குகளினின்றும் தப்பினரல்லர். அநேக பார்ப்பனர் உத்தியோகங்களை இழந்தனர். அநேக குடும்பங்கள் பரிதபித்தன.

8. தமிழகத்துப் பெரியார் ஒருவர் பார்ப்பன துவேஷத்தைப்பெருக்குதற்கே தமது நீண்ட ஆயுளை அற்பணம் செய்தனர். பார்ப்பன சமூகத்தின் பேரில் அவர் குவித்த வசைக்கும் அவதூருக்கும் வரம்பே இல்லை. தமிழ் நாட்டு அறிவாளிகளுக்கு அவருடைய லீலைகள் அளவிலா மகிழ்ச்சியை அளித்தன. இவையனைத்தையும் ஒரு நாகரீக அரசாங்கம் காக்ஷியாக பார்த்துக்கொண்டு வாளா இருந்தது.

தமிழருடைய செல்வாக்கு அக்காலத்தில் ஓங்கி இருந்தது.

9. பார்ப்பானைச் சென்ற 33 ஆண்டுகளாக தமிழ் அறிவாளிகள் இக்கொடுமைகளுக்காளாக்கியதற்குப் பார்ப்பன சமூகம் செய்த குற்றம் யாதென்று விளங்கவில்லை. பார்ப்பான் நான்கு ஜாதிகளை உற்பத்தி செய்தவனல்ல. அவனே அந்த வருண தருமத்துக்கும் அதின் கடமைகளுக்கும் கட்டுப்பட்டவன். பண்டை ரிஷிகள் அனைவரும் பார்ப்பனல்லர். அவர்களில் எல்லா வகுப்புக்களைச் சேர்ந்தோருமிருந்தனர். தொல்காப்பியர் நான்கு வருணங்களைக்கூறுகிறார். வள்ளுவர் "பார்ப்பான் ஒழுக்கம் குன்றக்கெடும்" என்கின்றனர். பார்ப்பனீயத்தைத் தாங்குவது சீலமென்றனர். உயர்திரு. மறைமலையடிகள் நான்கு வருணங்களைக் கண்டவர்கள் தமிழரென்றும், பின்னர், அவர்களிடமிருந்து இப்பாகுபாட்டை ஆரியர் கைக்கொண்டனரென்றும் கூறுகிறார். பெரியாழ்வார் மரபைச்சேர்நத முன்குடுமிப் பார்ப்பனர் தனித்தமிழரேயாவர். அவர்களிடத்தும் நமது தமிழறிவாளிகளுக்கு துவேஷ புத்தி மாறவில்லை. தமிழ் மக்களே பல ஜாதிகளாகப் பிரிந்திருக்கின்றனர். அவர்களிடம் ஜாதி புத்தி பலமாக குடிகொண்டிருக்கிறது. அவர்கள் ஜாதி உணர்ச்சியை வெறுப்பாராயின், பார்ப்பனரைப் பகைக்குமுன் தங்களுடைய ஜாதிவேற்றுமைகளை ஒழித்துக் கொள்ள கடமைப்பட்டவராவர்.

10. பார்ப்பனர்மேல் பார்ப்பனரல்லாதார் பகைமை கொள்ள யாதொரு தகுந்த காரணமும் காண்டலரிது. பார்ப்பனரல்லாதாரியக்கமே விஷமிகளின் செயலாகும். சிலருடைய சுயநலத்தைக் கோரியதாகும். தமிழ் நாட்டில் பொது மக்களின் விழிப்பு ஏற்பட்டிருப்பின், இவ்வியக்கம் வெகு காலத்துக்கு முன்பே மறைந்திருக்கும். ஆனால் இவ்வியக்

கத்தால் தமிழகத்தில் பெரிதும் பயன் பெற்ேறார் முஸ்லிம்களும் கிருஸ்தவர்களுமாவர். இவர்கள், பார்ப்பனரைவிட, மற்ற இந்துக்களுக்கு எவ்வகையில் உற்றவரென்பதும்விளங்கவில்லை. இங்கு, பார்ப்பனரைக் கல்வியிலும் உத்தியோகத்திலும் ஒடுக்கும் தமிழருக்குத் தென் ஆப்பிரிக்காவிலும் சிலோனிலும் நடக்கும் அநீதிகளை ஆக்ஷேபிக்க வாயுண்டா? பார்ப்பனருக்குத் தமிழர் இந்நீண்ட காலமாக இழைத்திருக்கும் தீங்குகளை உலகு அறிந்திலது. அறிந்திருக்குமெனின், தமிழனொருவனும் உலகின் முன் தலை நிமிர்ந்து நிற்கான்! பார்ப்பான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவனு அல்லது அன்னியனுவென்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். முஸ்லிம்களையும் கிருஸ்தவர்களையும் தங்களைச் சேர்ந்தவர்களாகப் பாவிக்கும் தமிழர், பார்ப்பானை அந்நியனுகக் கருதுகின்றனரென்பது முறண்பட்டதாகும்.

11. சமீபத்தில், சில பார்ப்பனர்கள் ஒரு மந்திரி முன்னர், தங்கள் சமூகத்துக்கு மட்டும் சர்க்கார் உத்தியோகங்களிலும் தொழிற் கல்வித் துறையிலும் பங்கு விதித்து தங்களுடைய சமமான பாத்தியத்தைக் குறைத்திருப்பதின் அநீதத்தை எடுத்துக் காட்டியபொழுது, அப் பெரியார் அப் பார்ப்பனரை வகுப்பு வாதத்தை விட்டு விடும்படி புத்தி புகட்டினராம். ஏ! பெரியோய்!! வகுப்புவாதத்தை யாரிடம் கண்டீர்!!! உமது ஆக்ஷியிலா, அல்லது ஏழைப் பார்ப்பனரிடத்தா? ஒருவனுக்கு, தேர்ச்சி மட்டமாக இருப்பினும் அவன் .பிறவியினுல் (பார்ப்பான் அல்லாத பிறவியினுல்) உத்தியோகமும், கல்வியும்பெற அருகனெனன்பது வகுப்புவாதமா, அல்லது உயர்ந்த தேர்ச்சியே உத்தியோகத்துக்கும் கல்விக்கும் அருகதையைக் கொடுக்க வேண்டுமென்று மன்றுடுவது வருப்புவாதமா? தமிழ் நாட்டில்

பார்ப்பனர் வகுப்புவாதிகளா, அல்லது பார்ப்பனரல்லாதாரா? தமிழ் மக்கள் ஒரு விஷயத்தைத் திடமாக உணர வேண்டும். தமிழ் நாட்டில் காங்கிரஸ் வீரர்களெனப் பதவி வகித்துவரும் தமிழர் அனைவரும் பழைய, ஆவேசம்கொண்ட ஜஸ்டிஸ்காரர்களாவர். அவர்களுடைய கொள்கையோ, ஆவேசமோ, இன்னும் மாறினபாடில்லை. ஆனால், அவர்கள், சமயோசிதமாக, காங்கிரஸ் போர்வையைப் போர்த்துக்கொண்டு இப்பொழுது பதவியும் பெருமையும் எய்தியுள்ளனர். தமிழ் நாட்டில், அரசாங்க நிர்வாகம், திறனற்றும் சீர் கெட்டுமிருப்பதற்குக் காரணம், பிறப்பினால் உத்தியோகமும் பதவியும் என்னும் விஷமக் கொள்கை என்பதை இவர்கள் அறிகிலர். ஹரிஜனங்கள், புது அமைப்பில், பத்து ஆண்டுகளுக்கே தங்களுக்கு தனித் தொகுதியை வேண்டுகின்றனர். பின்னர் பொதுத் தொகுதியின் லாப நஷ்டங்களை ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கின்றனர். ஆனால் பார்ப்பனரல்லாதார் உத்தியோகத்திலும், கல்வியிலும் முப்பது ஆண்டுகளாக விசேஷ சலுகையை அடைந்து வந்திருந்தும் அவர்களுடைய ஆசை இன்னும் தீரவில்லை.

12. ஆந்திர நாடு உருவெடுப்பதின் காரணமாக, இப்பொழுது, சென்னை நகரின் பாத்தியத்தைக் குறித்து ஆந்திரருக்கும் தமிழருக்கும் விரோதம் நடந்து வருகிறது. ஆந்திரர்கள் கூறும் யோசனைகளில், சென்னை நகரையும் அதன் சுற்று வட்டாரத்தையும் ஒரு தனி மாகாணமாக்குவதும் அம்மாகாணம் மத்திய சர்க்காரின் கீழ் பரிபாலிக்கப்படுவதும், ஒன்று. இந்த யோசனையைத் தமிழர் எதிர்க்கின்றனர். இவ்வெதிர்ப்பைப் பார்ப்பனர் ஆதரிப்பதும் இவ்விவாதத்தில் தமிழரைப் பார்ப்பனர் போற்றுவதும் விந்தையிலும் விந்தையாகவிருக்கின்றது. சென்னை நகராவது தமிழறிஞர்களு

டைய அவாவிலிருந்து மீட்கப்படுமாயின், பார்ப்பனர் தன் மதிப்புடனும் சம உரிமையுடனும் அங்கு வாழ வசதி பெறுவர்.

## 12. காங்கிரசு வீரர்கள்.

1. நமது நாட்டின் சுதந்திரத்துக்குப் பல காரணங்கள் உள. மக்கள் எதிர்பாராத ஓர் இரவு, பல துக்க சம்பவங்களுடன், அது நமக்குக் கிடைத்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் களைத்துச் சளைத்துப் போயிருந்தது. இந்தியா ஒரு பளுவாக அதற்குத் தோற்றிற்று. உலகப் போக்கும் நமக்கு அனுகூலமாக இருந்தது. எனினும், காங்கிரசின் அரிய சேவையும் கட்டுப்பாடும் இதற்கு முக்கிய காரணமாக இருந்ததென்பதை யாரும் மறுக்க முடியாது.

2. நாடு சுதந்திரமடைந்தவுடன் அதையாளும் பொறுப்பு காங்கிரசைச் சார்ந்ததாக இருந்தது. நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றவேண்டியிருந்தது. நமது புதிய சுதந்திரத்தைப் பாக்கிஸ்தானத்தின் சூழ்ச்சிகளிலிருந்து காக்கவேண்டியிருந்தது. இந்துக்களைப் பெரிய வீரர்களாக முஸ்லிம்கள் என்றும் மதிக்கவில்லை: இத்துடன், முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தானம், எவ்வித முயற்சியுமில்லாமல், சுலபமாகக் கிடைத்து விட்டது. நாட்டின் உள் நிலையும் திருப்தியாக இருக்கவில்லை. உணவுப் பொருள்களின் குறைவு பெருத்த நெருக்கடியைப் பல பாகங்களிலும் உண்டு பண்ணிற்று. தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தங்களும், மிரட்டல்களும் அதிகரித்தன. பொது உடைமைக்காரர்களுடைய நாச வேலைகளும் காணப்பட்டன. சமஸ்தானங்களைத் திருத்தி மாகாணங்களாக அமைக்கும் வேலை காங்கிரசு தலைவர்களுடைய முழு கவனத்தையும் கவர்ந்தது.

இந்நிலையில் காங்கிரசு இயக்கத்தை, மாகாணங்களில் நேரான வழியில் நடத்துவார் யாரும் இல்லாமல், அந்தந்த மாகாணமும், தன்னிஷ்டம்போல், தான்தோன்றியாய் நடந்துகொள்ளும்படி விடப்பட்டது.

3. நமது மாகாணத்தில் காங்கிரசுகாரர்கள் சட்டசபைகளைக் கைப்பற்றினர். நாட்டையாளும் அதிகாரத்தையடைந்தனர். ஆனால் அவர்கள் ஆக்ஷியின் பொருப்பை உணரவில்லை. அவர்களிற் பெரும்பாலோர் சம கல்வியும் அறிவும் உடையோர். ஆனால் சிலர்தான் மந்திரிகளாக இருக்க முடியும். எல்லோரும் மந்திரிகளாக இருக்க முடியாது. நாடு கண்ட்ரோல்களாலும் அவசரச்சட்டங்களாலும்நிறைந்திருந்தது; அவைகளின் அமுல் முழுதும் நிரந்தர அதிகாரிகள் வசமிருந்தது. மக்கள் ஒரு லைசென்சையோ அல்லது விசேஷ உத்திரவையோ பெறுவது சுலபமாக இருக்கவில்லை. இந்நிலையில், ஸ்தல சட்டசபை அங்கத்தினர்களுக்கு எல்லா அதிகாரிகளையும் காணவும், எல்லா விஷயங்களைக் குறித்து அவர்களுடன் பேசவும், தங்கள் யுக்தப்படி எல்லாவிஷயங்கள் சம்பந்தமாகவும் சிபார்சு செய்யவும் வசதி அளிக்கப்பட்டது. உத்தியோகஸ்தர்களும் தங்களுடைய இலாகா விஷயங்கள் சம்பந்தமாக ஸ்தல காங்கிரசு சட்ட சபை அங்கத்தினருடன் கலந்து பேச வேண்டுமென்றும் அவர்களுடைய அபிப்பிராயங்களையும் சிபார்சுகளையும் கவனிக்க வேண்டுமென்றும் ஆக்ஞாபிக்கப்பட்டனர். காங்கிரசு மந்திரிகளோ இவ்வங்கத்தினர்களின் பழைய சகாக்கள். இவர்களுக்கு அவர்களைத் தங்கள் இஷ்டப்படி காணவும் பேசவும் உரிமையுண்டு. இந்நிலையில், காங்கிரசு சட்டசபை அங்கத்தினருக்கு அரசாங்கத்திலுள்ள அபரிமிதமான செல்வாக்கை நமது வியாபாரிகள் உணர்ந்தனர். தங்களுடைய தகுதியுள்ளதும், தகுதி

யற்றதுமான எல்லா கோரிக்கைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களுடைய செல்வாக்கை உபயோகித்தனர். தங்களுடைய காரிய சித்திக்காக ஏராளமாகப் பொருளைச் செலவிட்டனர். பல சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் காங்கிரசு சட்டசபை அங்கத்தினர்களுக்கு பயந்து அவர்கள் சொல்படி நடந்தனர். இன்னும் பலர் அவர்களுடன் கூட்டுறவு வைத்துக் கொண்டனர். காங்கிரசு அங்கத்தினர்களும் ஒழுங்கீனமாகப் பொருள் ஈட்டினர். சர்க்கார் அதிகாரிகளும் அநீத வருமானத்தைச் சம்பாதித்தனர். காங்கிரசு மந்திரிகளுடய செல்வாக்கும் காங்கிரசு சட்டசபை அங்கத்தினர்களுடைய செல்வாக்கும் சமமாக இருந்தது. இவர்களுடைய வருமானமும் அவர்களுடைய வருமானத்துக்கு குறையவில்லை. ஆனால் நாட்டின் நிர்வாகம் குலைந்துவிட்டது.

4. காங்கிரசுகாரர்களுடைய ஒழுங்கீனங்களும் அவர்களுடைய அநீத சம்பாத்தியங்களும் நாடெங்கும் திகைப்பை உண்டாக்கின. ஆனால் மக்கள் திறனற்றிருந்தனர். காலஞ்சென்ற திரு. தேசபக்த கொண்டா வெங்கடப்ப அய்யா அவர்கள் சட்டசபை காங்கிரசு அங்கத்தினர்களை கொள்ளைக்காரர்களுடைய கூட்டமென கூறினர்! காங்கிரசின் பெயரையும் செல்வாக்கையும்கொண்டு பதவி பெற்று, அப்பதவியைக் காங்கிரசுகாரர்கள் தங்களுடைய சுயநலனுக்கு உபயோகிப்பதைக்கண்ட மகாத்மாஜிகாங்கிரசுஸ்தாபனத்தையே கலைத்துவிட்வேண்டுமென்று உறுதிகொண்டனர். இவ்வநீதங்களைச் செவியுற்ற திருபாபு புருஷோத்தமதாஸ் டாண்டன் அவர்கள் துக்கக் கண்ணீர் வடித்தனர்.

5. நாட்டின் துரதிருஷ்டத்தால், மகாத்மாஜி அவர்கள் ஒரு அறிவிலியின் கையால் மறைந்தார். தேசபக்த

கொண்டா வெங்கடப்பய்யா அவர்களும் காலகதியை அடைந்தார். திருபாபு புருஷோத்தமதாஸ் டாண்டன் அவர்கள் காங்கரசைப்புனிதப்படுத்தும் நோக்கத்துடன் அதின் தலைமைப் பதவியைத் தேடினர். ஆனல் காங்கிரசுகாரர்கள் அவருடைய தூய்மையைக்கண்டு அஞ்சினர். அவரை விடுத்து, தங்களுக்கு இசைந்தவரான திரு. பட்டாபி சீதாராமய்யா அவர்களைக் காங்கரசின் தலைவராகத்தேர்ந்தெடுத்தனர். இவருடைய சீடரும் நமது பழைய நண்பருமாகிய திரு. கலா. வெங்கடராவ் அவர்கள்—இப்பொழுது இவர் காங்கிரசு பொது காரியதரிசியாக மாறியுள்ளார்—காங்கிரசு காரர்களின் ஒழுங்கீனங்களையும் அநீத சம்பாத்தியங்களையும் மழுப்ப முயலுகின்ருர். முதலில், இவர் சட்டசபை காங்கிரசு அங்கத்தினர்களுடைய ஒழுங்கீனமும் சுயநலவேட்டையும் மிகைப்படுத்தி கூறப்படுவதாகச் சொன்னர். இப்பால் இவர், எல்லா ஸ்தாபனங்களிலும் இரண்டொரு ஒழுங்கீனமுள்ளவர்கள் (கருப்பு ஆடுகள்) இருப்பரென்றும், காங்கிரசிலும் அத்தகையோர் இருப்பது ஆச்சரியத்தை விளைவிக்கவேண்டியதில்லையென்றும் சொல்லுகிருர். ஆனல், இன்னெரு பெரியாருடைய கூற்று, காங்கிரசுக்காரர்களின் ஒழுங்கீனங்களைக் காய்ந்தமாடு கம்பங்காட்டில் புகுந்ததற்கு ஒப்பிட்டிருப்பது இவருடைய பரிவைப் பொய்யாக்குகின்றது. எப்படியிருந்தபோதிலும், திரு. வெங்கடராவ் அவர்களாவது, அவருடைய குரு திரு. பட்டாபி சீத்தாராமய்யா அவர்களாவது, காங்கிரசிலுள்ள இந்த கருப்பு ஆடுகளைப் கண்டுபிடிக்கவாவது அவர்களை அதினின்றும் விலக்கவாவது முயற்ச்சித்ததாக தெரியவில்லை. நமது மந்திரிமார்களும் இச்சுயநலமாசினின்றும் நீங்கினவர்களாகத் தெரியவில்லை. முன் மந்திரி சபையாரும், பின் மந்திரி சபையாரும், ஒருவருக்கொருவர், இப்

பெருமையைத் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ளுகிறார்கள்.

6. காங்கிரசுக்காரர்களின் ஒழுங்கீனங்களை இங்கு குறித்ததினால், அச்சபையில் ஒழுக்கமுள்ள உத்தமர் யாரும் இல்லையென்று கொள்ளல் தகாது. ஈண்டு கூறியவை பெரும்பாலோருடைய செய்கைகளைப் பற்றியதாகும்! அச்சபையை அலர் தூற்றுதலும் நமது நோக்கமல்ல. ஆனால் மகாத்மாஜியின் தலைமையின் கீழ் சுதந்திரப் போர் புரிந்து நமக்குச் சுதந்திரப்பேற்றைக்கொடுத்த, தியாகமே உருக்கொண்டிருந்த, காங்கிரசுக்கும், மகாத்மாஜியின் மறைவிக்குப் பின்னர், சுயநலமிகளின் சூழா அமாகத்திகமும் இப்பொழுதிருக்கும் காங்கிரசுக்குமுள்ள மகத்தான வித்தியாசத்தை மக்கள் உணரவேண்டுமென்பதே எமது நோக்கம்.

7. ஒரு மந்திரியின் ஒழுங்கீன சம்பாத்தியத்தைக் குறித்து மகாத்மாஜி கேட்டிருந்தார். இம்மந்திரி அதற்குச் சமாதானம் சொல்லத்தொடங்கவே, மகாத்மாஜி அவரை ஒரே கேள்வி கேட்டார். பிறர் குறிப்பிடும் சொத்தை அவர் சம்பாதித்தது உண்மையாவென்பது. அதை மந்திரி ஒப்புக்கொண்டார். உடனே மகாத்மாஜி அதுவே போதுமென்று சொல்லி, அவரை உத்தியோக ஆசையை விடுத்து, ஒரு கிராமத்துக்குச் சென்று ஆச்சிரமவாசம் செய்யுமாறு புத்தி கூறினார். இந்த புத்திமதியை நமது காங்கிரசுகாரர்கள் ஏற்றுக்கொள்ளுவரா?

## 13. அஹிம்சை.

1. மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் பிறனுக்குத் துன்பம் செய்யாமையே அஹிம்சையாகும். இதுவே இன்னாசெய்யாமை. இங்கு பிறன் என்பது அனைவரையும்

குறிக்கும். அஹிம்சை, தனி மனிதர்கள் தங்களுடைய சம்பந்தங்களில் மட்டும் பின்பற்றவேண்டிய கடமையல்ல. நாடு பிரஜைகளின்பாலும், பிரஜைகள் நாட்டின்பாலும், ஒரு நாடு மற்றொரு நாட்டின்பாலும், இதே தர்மத்தைக் கையாள வேண்டும். ஆனால் முழு அஹிம்சை வாழ்க்கையில் இயலுமாவென்பது வேறு விஷயம்.

2. நாட்டின் சட்டங்களைக் கடப்பதும் அதன் விதிகளைப் புறக்கணிப்பதும், மக்கள் நாட்டின்பால் காட்டும் ஹிம்சையாகும். அவ்வண்ணமே நாட்டினுடைய சட்டதிட்டங்களும், படைகளும், சிறைகளும், ஆயுதங்களும் அதின் ஹிம்சையைக் காட்டும் சின்னங்களாகும். ஒரு நாட்டில் ஹிம்சையை உபயோகிக்கும்உரிமை, அதின்சர்க்காருக்குமட்டும் உண்டு, பிறர் எவருக்குமில்லை. இவ்விம்சையை உபயோகிக்காமல், எந்த நாடும், மானிடவருக்கம் இப்பொழுதிருக்கும் நிலையில், தன்னுடைய ஆக்ஷியை நடத்த முடியாது. ஆனால், எந்தநாடு மிக குறைந்த ஹிம்சையைத் தன் மக்களுக்குச் செய்கின்றதோ, அதுதான் மேன்மையுற்றது.

3. சத்தியமென்பது நடந்தசம்பவங்களை, நடந்தபடி. வாக்கினால் கூறுவதுமட்டுமல்ல. தர்மத்தை மனதினால், ஐயந்திரிபு அற, நேர்மையாக உணர்வதும், அவ்வுணர்ச்சியின் வண்ணம் ஒழுகுவதுமே சத்தியமாகும். ஒரு நாட்டின் சட்ட திட்டங்கள் அறத்தின் வழியனவாக இருக்கவேண்டும். அவைகள் அவ்விதமிருக்கத்தவறின், மக்கள். அவைகளின் மேல் ஆக்கிரகம்கொள்ள உரியர். ஆனால் இது மிகவும் அரிதான சம்பவமாக இருக்கவேண்டும்.

4. தொழிலாளருடைய வேலை நிறுத்தமும் ஹிம்சையின்பாலதாகும். முதலாளிகள் நிற்பந்திக்கப்படுகின்றனர்.

மக்கள், பொருள் உற்பத்தியின் குறைவினுல், சங்கடத்தை அடைகின்றனர். ஒரு சுதந்திர நாட்டில் வேலை நிறுத்தத்துக்கோ, சத்தியாக்கிரகத்துக்கோ ஆஸ்பதமும் கிடையாதென்னலாம். "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண நன்னயஞ்செய்துவிடல்" என்பது பொய்யாமொழி. இம்சைக்கு இம்சை எதிரொலி எனின், அந்நாட்டில் இம்சை பெருகும். தீமைக்கு நன்மை பயனெனின், அங்கு தீமையும் குறையும், அதின் வேறும் அற்றுப்போகும். மக்கள் பணிய இயலாத சட்டங்களை இயற்றி, அவர்களைக்குற்றவாளிகளாக்கி சிறைக்கனுப்புவது அறிவாளியின் செயலல்ல. சட்டங்கள் பெருக, அதிகாரிகளின் வேலையும் ஆசையும் பெருகும். இதுவும் ஹிம்சையைக் குறைக்கக்கூடியதல்ல.

5. மது விலக்குச் சட்டம் பயனுருமற்போனதை உணர்ந்தும், நாம் அதிகஹிம்சையை உபயோகித்து அதைப் பயன்படுத்த உறுதிகொள்ளுகிருேம். குடிகாரன் காலில் விழுந்து அவனைக் குடிக்காமலிருக்கும்படி வேண்டிக்கொண்ட காலத்தை, அதிகாரத்திமிரினுல், மறந்துவிட்டோம். அவனைத் திருத்தும் வழி அன்பின் வழி, சிறையின் வழியல்ல, வென்பதைப் பொய்யாக்குகிருேம்.

6. அவசரச் சட்டங்களையும் கண்ட்ரோல்களையும் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிருேம். கிராமாந்திரங்களில், ஒரு வருஷத்துக்கு மேலாக, உணவுப்பொருள்களின் பங்கு - பிரிவினைக்கு, யாதொரு அவசியமுமில்லாமலிருக்க அது அங்கு இன்னும் நடந்துவருகிறது. இதினுல் பயன் படுவோர்கள் வியாபாரிகளும் அதற்குட்பட்ட உத்தியோகஸ்தர்களுமாவர். ஒரு திட்டத்தை இயற்றுவதினும், அதை நிறுத்துவது கடினமாகும். வீடுகளின் குடித்தனத்தைப் பற்றிய சட்டம் புது வீடுகள் கட்டுவதையே அடியோடு

நிறுத்திவிட்டது. இப்பொழுதிருக்கும் வீடுகள், ஆண்டுதோறும் பெருகும் ஜன சமூகத்துக்கு, இன்னும் எவ்வளவு ஆண்டுகளுக்குப் போதும்? இவ்வாடகை வீடுகளில் வசிப்போரில் பலர் கள்ள மார்க்கெட்டில் பணம் சம்பாதிக்கும் கள்ள வியாபாரிகளாவர். இவர்களுக்குத் துணை நிற்பது மதியீனமாகும்.

7. மகாத்மாஜி அவதரித்த நமது நாட்டில் ஹிம்சையின் சின்னங்கள் பெருகுவதைக்கண்டு மக்கள் துயருற வேண்டும். அவைகளின்பால் அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்துவார்களாக!

## 14. பொது உடைமை.

1. பொது உடைமைக் கொள்கையின் பொருளை மக்கள் நேராக உணரவேண்டும். அக்கொள்கையைக் கைக்கொண்ட நாட்டில், உடைமையனைத்தும் பொது, அதாவது அந்நாட்டின் சர்க்காரைச் சேர்ந்ததாகும். இங்கு பொதுவென்பது நாடு பொது என்பதைப்போன்றது. அந்நாட்டில் எந்த தனி மனிதனும், எந்தசொத்தையும்—வீடோ, நிலமோ, நகையோ, பணமோ — சம்பாதிக்கவோ. வைத்துக் கொள்ளவோ உரியனல்லன், அந்நாட்டிலுள்ள சகல சொத்துக்களும், அதாவது, வீடுகள், நிலங்கள், கட்டிடங்கள், உற்பத்திசாலைகள், விளைபொருள்கள், உற்பத்திசாமான்கள், தங்கம், வெள்ளி ஆகிய சகலமும் அந்நாட்டின் சர்க்காருக்கு பாத்தியப்பட்டவை. ஒவ்வொருவரும், தங்களுடைய பெண்டுபிள்ளைகள் உட்பட, தங்களுடைய சக்திக்கேற்றபடி, சர்க்கார் பூமிகளைச் சாகுபடி செய்வதிலோ, அல்லது சர்க்காருடைய தொழிற்சாலைகளில் உழைப்பதிலோ, பாடுபடவேண்டும். இவ்வுழைப்புக்குக் கைமாறாக, ஒவ்வொ

ருவரும், தங்களுடைய தேவைக்கேற்றபடி, சர்க்காருடைய பண்டகசாலைகளிலிருந்து, உணவுப் பொருள்களையும், மற்ற சாமான்களையும், பெறுவர். இதைக்கொண்டு அவர் ஜீவிக்க வேண்டும். கல்யாணம் முதலிய சடங்குகளை நடத்துவதி லும், அவர் சர்க்கார் விதிகளின்படி நடக்கவேண்டும். பிறப்பு முதல் இறப்புவரையில் எல்லா சம்பவங்களையும் சர்க்கார் விதிகள் ஆளுகின்றன. ஒருவரும் தம்மிஷ்டப்படி எந்த காரியத்தையும் செய்ய இயலாது. அவ்விதம் செய்வது குற் றமுமாகும். இதுதான் தொழிலாளிகளின் ராஜ்யம். இந்த ராஜ்யத்தில், சோம்பேறித்தனம் குற்றமாகும். உண்மை யாக உழைக்கிறவனுக்கு வயிற்றுக்குச் சோறு கிடைக்கும்.

2. பொதுவுடைமை நாட்டில், தனி ஒருவனுக்குச் சொத்தும் கிடையாது: சுதந்திரமும் கிடையாது. எல்லா சொத்துக்களும் அரசாங்கத்துக்கு பாத்தியப்பட்டவையா கும். எல்லா சொத்துக்களும் அரசாங்கத்துக்கு அற்பண மாவது போல், மனித சுதந்திரம் முழுவதும் அரசாங்கத் துக்கே அற்பணமாகிறது. நாட்டுக்குச் சுதந்திரமேயொழிய, அங்குவசிக்கும் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை. அவர்கள் அரசாங்கத்தின் விதிகளின்படி தொழிலைச் செய்து வயிற்றை வளர்க்கும் அடிமைகளாவர்.

3. பொது உடமைக்காரர் மற்ற நாடுகளை முதலாளி ராஜ்யங்கள் என்று கூறுவர், ஆனால் இம்முதலாளி ராஜ்யங்க ளில் தனி ஒருவனுக்குத் தன் இஷ்டம்போல் வாழ உரிமை யுண்டு. அவன் சம்பாதிக்கும் சொத்துக்கள் அவனைச் சேர்ந் தவையாகும்: விதித்த வரிகளை வசூலிக்கும் உரிமையைத் தவிர, வேறு எவ்வித உரிமையும் மக்களின் சொத்துக்களில் அரசாங்கத்துக்கு கிடையாது.

4. முதலாளி ராஜ்யமென்பது நமது நாட்டுக்குப் பொருந்தாது. நமது நாடு ஏழுலக்ஷம் கிராமங்களடங்கியது. அங்குவாழும் மக்களுக்கு, அநேகமாக, சொந்த பட்டாநிலங்கள் இருக்கின்றன. அவர்கள் அவைகளைச் சாகுபடிசெய்து சுயேச்சையாக ஜீவிக்கின்றனர். அவர்கள் எந்த முதலாளிகளுக்கும் உட்பட்டு நடப்பதில்லை. முதலாளி ராஜ்யம் நம் கிராமங்களில் கிடையாது. அநேகர் பிறர் நிலங்களைக் குத்தகைக்குப் பிடித்து சாகுபடிசெய்து வாழ்கின்றனர். விவசாய கூலிவேலை செய்வோரும் தக்க ஊதியம் பெற்று கௌரவமாக ஜீவிக்கின்றனர். அநேகருக்குச் சர்க்கார் தருசு நிலங்களும் சுலபமாக கிடைக்கின்றன.

5. தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிலையும் நமது நாட்டில் சீரடைந்து வருகிறது. அவருடைய நலங்களைப் பாதுகாப்பதற்கு அநேக சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவர்களுடைய குறைகளை நீக்குதற்கு நீதிஸ்தலங்களும் அமைக்கப்பட்டுள. நமதுநாடு சுதந்திரமடைந்திருப்பதுடன் வயதுவந்த ஒவ்வொரு நபருக்கும் வாக்குரிமையும் அளிக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளர் தங்களுடைய வாக்கின் சக்தியைக்கொண்டு தங்களுடைய நிலையைத் தாங்கள் கோரும்வண்ணம் மேன்மைப்படுத்திக்கொள்ளவும் வசதி பெற்றுளர். வேலை நிறுத்தம் செய்த நாளைக்கும் சம்பளம் வாங்கிப்பழகியிருக்கும் நமது தொழிலாளிகள், பொது உடைமையின் அடிமைத்தனத்தை எளிதில் உணர்வர். பொது உடைமை நாட்டில் எக்காரணத்தைக் கொண்டும் வேலை நிறுத்தம் செய்யத்தகாது. அது அங்கு ஒரு பெருங்குற்றமாகும். ஆதலால் பெறப்படுவது யாதெனின், பொதுஉடைமை நாட்டில், ஒருவன் தன் சுதந்திரத்தைப் பறிகொடுத்துவிட்டு, பாடுபட்டு வயிற்றை வளர்

க்க உரியவன். நமது நாட்டிலோ இவன் சுதந்திர புருஷனாக இருந்துகொண்டு, தன்னிஷ்டப்பட்ட தொழிலைச்செய்து, பொருளீட்டி கௌரவமாக ஜீவிக்கக்கூடியவன். இவன் சிக்கனமாக வாழ்வை நடத்தி முதலாளியின் நம்பிக்கையைப் பெறின், இவனே, கடிதில், முதலாளியின் மேன்மை நிலையை அடைந்துவிடுவன்.

6. ஆனால் பொதுஉடமையைப்பற்றி உலகில் செய்யும் பிரசாரம் உண்மையானதல்ல. பொது உடைமை நாடாகிய ரஷ்யா ஒரு இருப்புத்திரையால் நம்முடைய பார்வையினின்றும் மறைக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள மக்களுக்கு ரஷ்யாவிற்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலையை அறிய வசதிஇலது. அங்குள்ள மக்களும் வெளிநாடுகளுக்கு வந்து இங்குள்ளவர்களுடன் கலந்து பேசவும் இவர்களுடைய நிலையை அறியவும் உரிமையுடையோரல்லர். ரஷ்யாவின் உண்மை நிலையை அறிந்த எவனும் பொது உடைமையை ஆதரிக்கமாட்டான். அங்குமக்கள் அடிமைகளாக நடத்தப் படுகின்றனர். அவர்கள் எந்த போகங்களையும் அறியார். உழைத்து, பாடுபட்டு வயிற்றைக்கழுவுகின்றனர். அவர்கள் தங்கள் குறைகளை யாரிடமும் முறையிடவும் இயலாதவர். ஆனால் வெளிநாட்டு மக்களின் ஆதரவைப் பெறுதற்காகப் பொதுஉடைமையின் நோக்கம், ஒரு நாட்டுச் சொத்துக்களை அந்நாட்டு மக்களிடம் பிரித்துக்கொடுப்பது அதன் நோக்கமாக திரித்துக் கூறப்படுகிறது. ரஷ்ய அரசாங்கம் ஏராளமாகப் பணச்செலவு செய்து தங்களுக்குப் பரிந்துபேச ஒவ்வொரு நாட்டிலும் ஏஜண்டுகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இவர்களுடைய தொழில் அந்தந்தநாட்டு ஏழைத்தொழிலாளர்களுக்குப் பணம்கொடுத்தும் ஆசைவார்த்தை சொல்லியும் அவர்களை நாசவேலையில் ஈடுபடும்படி செய்வதாகும்.

7. பணத்துக்கு ஆசைபட்டு தேசத்துரோகத்தை ஏற்றுக்கொண்ட பேதைகளாகிய அம்மக்கள் நமது ரெயில்வே வண்டிகளை க்கவிழ்க்கின்றனர், கட்டிடங்களை த்தகர்க்கின்றனர். பொருள்களுக்குத் தீ வைக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்களுக்கு உயிர்ச்சேதம் உண்டாகிறது. கோடிக்கணக்கான, பொருள்கள் நாசமடைகின்றன. பொதுஉடைமையின் கொள்கை மனிதனை விலங்காகச்செய்கிறது. இக்கொள்கையின் அடிமைக்கு கடவுளிடத்திலும் புண்ணியபாவத்திலும் நம்பிக்கை போய்விடுகிறது. இவன் தனது சொந்தநாட்டுக்குத் துரோகம் செய்து அதைப்பிறநாட்டுக்கு அடிமையாக்கப்பின் வாங்குவதில்லை. இவனுடைய ஆவேசமும், மிருகத்தன்மையும் இவனை நாகரீக சுதந்திரவாழ்வுக்கு விரோதியாக்குகிறது பிறரும் இவனை விலங்காக பாவித்து நடந்துகொண்டால் அவர்கள் பேரில் குறை கூற இவனுக்கு வழி இல்லை.

8. பொது உடைமைக் கொள்கை நமது நாட்டுத் தொழிலாளர்களிடம் பரவி வருவதாக நினைக்க இடமிருக்கிறது. இதை நாம் விளையாட்டாக விட்டு விடக்கூடாது. சமீபத்தில் நடந்த சம்பவங்களினால், இக்கொள்கை நமக்கு வினையாக முடிந்து வருகிறது. நாம் பொது உடைமையின் உண்மையான நோக்கத்தையும் தத்துவத்தையும் நமது தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்து, பொது உடைமையானது, நமது நாட்டின் சுதந்திரத்துக்கும், மனித சுதந்திரத்துக்கும், நமது மதத்துக்கும், கலைக்கும், நாகரீகத்திற்கும் பரம விரோதியென்பதை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும். நாம் காலையில் படுக்கையைவிட்டுஎழுந்திருக்கும் பொழுது "எல்லா ஜனங்களும் சுகமாக இருக்க வேண்டும்" என்கிற பிரார்த்தனையுடன் எழுந்திருக்கிறோம். அத்தகைய நாட்டில் பொது உடைமைக்கு இடமே இல்லை. மனிதனுடைய வாழ்க்

கைத்தரத்தை உயர்த்துவது பொது உடைமையாயின், அம்முயற்சி, நம்நாட்டில் பெரிதும் நடைபெற்று வருகின்றது. நாம் அதற்காக ரஷ்யாவுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை.

9. பொது உடைமையின் கொள்கை மனித இயற்கைக்கும், சுதந்திரத்துக்கும் விரோதியாக இருப்பதால், அவ்வியக்கம் சீக்கிரம் மறைந்து விடுமென்பதில் ஐயமில்லை. ரஷ்ய மக்களுடைய பொறுமைக்கும் ஒரு அளவு இருக்கவேண்டும். ஆனால் இந்நாசக்கொள்கை உலகில் உலாவும் வரையில், ரெயில்வேக்களையும், தொழிற்சாலைகளையும், சர்க்கார் சொத்துக்களையும் பாதுகாப்பது தங்களுடைய சாதாரண கடமையாக மக்கள் பாவித்து நடந்து, பொது உடைமையை யடக்குவதில் சர்க்காருடன் தங்களுடைய ஈடுபாட்டை வெளிப்படுத்திச் சர்க்காருக்கு உற்சாகத்தையுண்டாக்க வேண்டும்.

## 15. மக்களின் கடமை.

1. நமதுநாடு சுதந்திரமுற்றிருப்பதை மக்கள், ஐயமற, அறியவேண்டும். அச்சுதந்திரத்தில் எள்ளளவும் சந்தேகம் கொள்ளக்கூடாது. நமது நாட்டின் ஆக்ஷிச்சட்டம் அமைக்கப்பட்டு அமுலுக்கும் வந்துவிட்டது. அதின் விதிகளின் படி, அடுத்த ஆண்டில் (1951-ஶல்) நமது மகாணத்தின் சட்டசபைகளுக்கும், மத்திய அரசாங்கத்தின் சட்டசபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெறும். இத்தேர்தல்களில், இந்நாட்டிலுள்ள, 21 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் வாக்குரிமையுண்டு. இத்தேர்தல்கள் நாட்டின் கதியைச் சில வருஷங்களுக்கு நிர்ணயிக்கும். மக்கள் தங்களுடைய வாக்கின் மகிமையை உணர்ந்தும், நாட்டின் நலன் ஒன்றையே நினைத்தும், தங்களிடம் அநுதாப

முள்ளவர்களையும் தங்களுக்கு நம்பிக்கையுடையவர்களையுமே தங்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இப்பிரதிநிதிகள் கூடி நாட்டின் ஆக்ஷியாளரை நேமிப்பர். இந்நாட்டின் ஒரு மகனும் தேர்தல்களை வேடிக்கையாகவோ அல்லது அலக்ஷ்யமாகவோ நினைத்தல் தகாது. நமது இருக்கையும் நமது நாட்டின் இருக்கையுமே இத்தேர்தல்களின் முடிவைப்பொறுத்திருக்கும்.

2. இத்தேர்தல்களின் முடிவாக எந்த சர்க்கார் ஆக்ஷிக்கு வரினும், மக்கள் தங்களுடைய பிரஜா கடமைகளைச் சரிவர செய்ய வேண்டும். அவர்களுடைய முதற் கடமை நாட்டின் சட்டங்களுக்கு கீழ்படிந்து நடத்தலும், இரண்டாவது, அச்சர்க்கார் விதிக்கும் வரிகளைச் செலுத்துவதுமாகும்.

3. இந்நாடு நீண்ட காலமாக, அரிய பெரிய தியாகங்களைச் செய்து, இப்பொழுது சுதந்திரத்தை அடைந்துள்ளது. இச்சுதந்திரத்தை நிலைக்கும்படி செய்வது மக்களின் தலைசிறந்த கடமையாகும். அடுத்து வரும் பத்து ஆண்டுகளுக்காவது, இந்நாட்டின் மகன் எவனும், உரிமையைப் பாராட்டாமல், கடமையைத் தலைமேற்கொண்டு நடக்க கடமைபட்டவன். அவனிடத்தில் தியாகஞ்குறி, சலிக்காமல், காண வேணும்:—

(1) குடியானவர்கள் ஓயாத உழைப்பால் நிலங்களைப் பண்படுத்தி உணவுப் பொருள்களைப் பெருக்க வேண்டும்.

(2) தொழிலாளர், தங்களுடைய குறைகளை மறந்து, பொருள் உற்பத்தியில் கவனத்தை நாட்ட வேண்டும். வேலை நிறுத்தம் பழைய கதையாகிவிட வேண்டும்.

(3) முதலாளிகள் லாபத்தைக் கருதாது, தேசத்தின் மேன்மையையும், தொழிலாளர் நலனையும் தேடவேண்டும்.

சர்க்கார் விதிக்கும் வரிகளை மனம் கசக்காமல் செலுத்த வேண்டும். கள்ள வியாபாரத்தை மறந்துவிட வேண்டும்.

(4) வியாபாரிகள் சர்க்காருடைய எல்லா வரிகளையும் ஒழுங்காகச் செலுத்த வேண்டும். பொய்க் கணக்கையும் மோசத்தையும் ஒழிக்க வேண்டும். கள்ள வியாபாரிகள் எனப் பெற்ற கெட்ட பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும்.

(5) உத்தியோகஸ்தர்கள் ஒழுங்கு தவருது நடக்க வேண்டும். சலுகையோ; சிபார்சோ, பண ஆசையோ அவர்களுடைய நேர்மையை மாற்ற முடியாமல் இருக்க வேண்டும். தங்களுடைய வேலைகளில் குன்றாத ஆற்றலும் திறமையும் காட்ட வேண்டும்.

(6) ஹரிஜனங்கள் தன்மதிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு கிடைக்கும் பதவியையும் உத்தியோகத்தையும் தேசத் தொண்டாக மதித்து, திறனுடன் ஆற்ற வேண்டும். அவர்கள் எப்பொழுதும் திரு. டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய உயரிய உதாரணத்தைத் தங்கள் முன் வைத்துக் கொண்டு அவரைப்போல் நடக்க வேண்டும்.

(7) ஆனால் இச்சர்க்காரின் கடமை மிகப் பெரிது. அவர்கள் இயற்றும் சட்டங்கள் மக்களுக்கு உகந்தவையாகவும் அவர்கள் எளிதில் பணியக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். அவர்கள் விதிக்கும்வரிகளும் லகுவாகவும் மக்கள் செலுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அவர்கள் நாட்டின் செல்வ நிலையைக் கண்ணேபோல் பாதுகாக்கவேண்டும். தக்க பயனை அளிக்காத எச்செலவையும் அவர்கள்

ஏற்காமல், நாட்டின் வருவாயைப் பெருக்கும் எல்லா வழிகளையும் தேடவேண்டும். மக்களைச் சுதந்திர புருஷர்களாக எண்ணிச் சம உரிமையுடன் நடத்த வேண்டும். ஜாதி, மதம் பற்றிய எச்சலுகையும் அரசாங்கத்தின் எத்துறையிலும் காட்டாமல் இருக்க வேண்டும்.

4. எந்நாட்டில் மக்கள், இவ்வாறு, சுய நலனை மறந்து நாட்டுக்காகப் பாடுபடுகின்றனரோ, அந்நாடு மேற் குறித்த காலத்துக்கு முன்பே, பாலும் தேனும் பெருக்கெடுக்க எல்லா வளங்களும் பொருந்தி செழித்தோங்கும். மக்கள், கல்விசம்பந்நராய் ஆரோக்கியத்துடன்வாழ்வர். அங்குமக்கள் சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்து அதற்காக தங்களுடைய சகலத்தையும் அற்பணம் செய்வர். அந்நாடு உலகத்தில் யாருடனும் பகைமை கொள்ளாது. உலகும் அந்நாட்டுடன் பகைமை கோராது. அங்கு சுதந்திரம் என்றும் நிலைத்து நிற்கும்.

## 16. உதிரிகள்.

1. ஒரு நாடு சுதந்திரத்துக்குப் போராடுங்கால், அதின் மக்களின்கண் தியாக உணர்ச்சி தலைசிறந்து நிற்கும். ஆனால் அச்சுதந்திரம் கிட்டினவுடன், அதே மக்களிடை சுயநலங்கள் தலைதூக்கும். இது இயற்கை. காங்கிரசுகாரர்கள் நமது நாடு சுதந்திரம் அடைந்தும் அடையாமலும் இருக்கும்பொழுதே, சுயநலப் புலிகளாக மாறியது இதற்குச் சிறந்த உதாரணமாகும். ஆதலால் யாதானுமொருவன், ராம ராஜ்யத்தை இந்நாட்டில் அமைப்பது தன்னுடைய பொறுப்பு என்று கூறின், மக்கள் அவன் சொல்லைச் சந்தேகத்துடன் கொள்ளல் வேண்டும். அவனைப் போலியென மதிக்க வேண்டும்.

2. ஒரு நாட்டின் ஜனநாயக ஆக்ஷிக்கு இரண்டு அரசியல் கக்ஷிகள் தேவை. இரண்டும் செல்வாக்குள்ளவைகளாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒன்றைக் கண்டு மற்றொன்று அஞ்சும். இரண்டும் பொறுப்புடனும் யோக்கியமாகவும் நடந்துகொள்ளும். அரசியலானது சமூக வாழ்வை நடத்துவது. சமூகத்தினுடைய தேவைகளும் ஆசைகளும் பலதரப்பட்டவை. அதன் விஷயங்களிற் சில விவாதத்துக்கும் உட்பட்டவை. இரண்டு கக்ஷிகளின் தாரதம்மியங்களையும் மக்கள் அறிய வேண்டும். ஒரு கக்ஷியினரிடமுள்ள குற்றங் குறைகளையும் மற்ற கக்ஷி எடுத்துரைக்கும்.

3. காங்கிரசைப் போன்ற ஒரு அகில பாரத கக்ஷியானது மாகாண அரசியல் வேலைக்கு ஏற்றதல்ல. அகில பாரத தலைவர்கள் மாகாண விஷயங்களின நுட்பங்களை உணருவதும் கஷ்டம். அவர்களுக்கு இவ்வேலைக்கு வேண்டிய அவகாசத்தைக் கொடுப்பதும் அரிது. காங்கிரசும் பொது மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது. மக்களும் காங்கிரசுகாரர்களை ருசிகண்ட பூனையென சந்தேகிப்பர். இவர்களும் அவர்களையணுகக் கூசுவர்.

4. காங்கிரசுகாரர்களைத் தவிர்த்த, நமது மாகாணத்தினுள்ள மற்ற அரசியல்வாதிகள் ஒத்த கொள்கையும் கட்டுப்பாடும் உடையோரல்லர். அவர்கள் உதிரிகள் என்று கூறப்படுகின்றனர். அவர்கள் சீலமும் புத்தி நுட்பமும் பொருந்தியவர்களாக இருப்பினும், அவர்களுடைய ஆலோசனைகளுக்கு அவர்களுடைய சொந்த மதிப்புக்கேற்ற சக்தியேயொழிய ஒரு ஸ்தாபனத்தின் ஆதரவும் செல்வாக்கும் அவைகளுக்குக் கிடையா. சட்டசபைகளின் இவ்வுதிரி அங்கத்

தினர்களுக்கு அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்று நடத்தும் வசதியும் இலது.

5. ஆதலால் நமது மாகாணத்தில் "ஜனங்கள் கக்ஷி" என்னும் பேருடன் ஒரு புது அரசியல் கக்ஷி தோன்றுவது அத்தியாவசியமாகும். காங்கிரசுகாரர்களைக் குறை கூறும் இக்கக்ஷி அரசியல் வாழ்க்கையில் மாசற்ற தூய்மையைக் காட்டவேண்டும். இதன் அங்கத்தினர் ஒவ்வொருவரும் தேசத் தொண்டையே காரியமாகவும் காரணமாகவும் பயனாகவும் கருதி அடுத்த பத்து ஆண்டுகளுக்காவது ஏழ்மை விரதத்தைப் பூண வேண்டும். பிறரையும் இவ்வழியில் தூண்ட வேண்டும். ஓயாமலும் சலியாமலும் உழைக்க வேண்டும்.

6. நாட்டில் இரண்டு கக்ஷிகள் அல்ல, பல கக்ஷிகள் ஏற்படும். ஆனால் ஒரு கக்ஷி தான் ஒரு சமயத்தில் அரசாங்கத்தை வகிக்க முடியும். கக்ஷிகள் வரலாம், கக்ஷிகள் போகலாம். ஆனால் நாட்டின் நிரந்தர உத்தியோகஸ்தர்கள் மாறாது நிற்பர். இவர்கள் எந்த கக்ஷியுடனும் விசேஷ உறவை வைத்துக் கொள்ளல் தகாது. இவர்கள் எல்லா கக்ஷிகளையும் சமமாக பாவித்து நடக்க வேண்டும். தேர்தல் சமயத்தில் அதிகாரத்திலிருக்கும் கக்ஷிகளுக்குச் சில வசதிகள் இருப்பது இயற்கை. ஆனால் உத்தியோகஸ்தர்களோ கிராமாதிகாரிகளோ, அக்கக்ஷிக்கு வாக்குத் தேடிக்கொடுப்பதோ அல்லது தேர்தல் வசதி சம்பாதித்துக் கொடுப்பதோ அடாத காரியமாகும்.

7. ஒரு வேளை நிரந்தர உத்தியோகஸ்தர்களும் கிராமாதிகாரிகளும் தங்களுடைய நேர்மையைக் கடந்து நடந்த போதிலும், மக்கள் அவர்களுடைய பொர்சுக்காவது மிரட்

டலுக்காவது செவி சாய்க்கவும் அஞ்சவும் கூடாது. கக்ஷி கோஷங்களைக் கண்டு மயங்கவும் கூடாது. வாக்குரிமை தெய்வீகமானது. அதைத் துர்விநியோகம் செய்யக்கூடாது. உரியவனை அது அடைய வேண்டும்.

ஓம் தத்ஸத்.

# அசோக தர்ம சக்கிரத்தின் சுழற்சி.

1. உலகத்தைத் தாங்குவது தர்மம்.

2. இத்தர்மத்தைப் பாதுகாப்பது அரசாங்கம்.

3. தர்மத்தின் வழி, அரசாங்கம் மட்டுமல்ல, மக்களும் நடக்க வேண்டும்.

4. இந்நாட்டின் பேரபாதிகள் இதின் வியாபாரிகள். இவர்களுடைய பேராசை அளவு கடந்தது. இது இவர்களுக்கு அழியா நிந்தையைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

5. தர்ம சக்கிரம் சலியாது சுழலுவதை இவர்கள் உணர வேண்டும். இவர்கள் இச்சக்கிரத்தின் கலருத சிக்ஷையினின்று, மீள வேண்டுமாயின், கள்ள வியாபாரத்தை அடியுடன் ஒழிக்க வேண்டும்.

6. மேலான மருந்தும் அதையுடலினுட் செலுத்தும் ஊசியின் அழுக்கால் பயன் கொடாமற்போம்: துன்பமும் கொடுக்கும். அதுபோல், அழுக்கடைந்த உத்தியோகஸ்தர் நாட்டைக் கெடுப்பர்.

7. இவரே, தூய்மையுற்றக்கால், நாட்டை...

தி சேலம் எலக்ட்ரிக் பிரிண்டிங் & லிதோ ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்